174

JL
J684m211 No.47
N28.2.9
159618

C375

Registered No. M. 2260.

மலர் 2 } விபவஸூ மார்கழிமீ 1928ஸூ டிசம்பர்–'29ஐஸ ஜனவரி { இதழ் 9

174

# ஏலவிவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்திலிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

THE
# CARDAMOM PLANTER,
THE ORGAN
OF
THE TRAVANCORE CARDAMOM
PLANTERS' ASSOCIATION,
UTHAMAPALAYAM.
MADURA Dt.

5-FEB 1929 MADRAS

# பொருள் அடக்கம்.


| தொடர் நிர். | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | நமது ஏல விவசாயி | 378 |
| 3. | ஏல விவசாயிப் பத்திரிகையைப்பற்றி | 380 |
| 4. | T. C. P. A. முதல் வருடப் பொதுக்கூட்டம் | 384 |
| 5. | T. C. P. A. மானேஜரின் வியாசம் | 386 |
| 6. | பொருளும் பொருள் செய் வகையும் | 392 |
| 7. | விவசாயக் கைத்தொழில் | 410 |
| 8. | ஒற்றுமை | 413 |
| 9. | விநோத மரங்கள் | 422 |
| 10. | திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் | 428 |
| 11. | ஆசிரியரின் குறிப்புகள். | 430 |


## சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவர்க்குச் சந்தா | | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ,, | ரூ. | 2—8—0 |

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன் பணம் அனுப்பவேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்.
"ஏல விவசாயி,"
உத்தமபாளையம்; மதுரை ஜில்லா.

குறிப்பு:—
வியாசம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு வியாசகாரர்களே பொறுப்பாளியாவர்.

# "ஏல விவசாயி"


திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.



5 FEB 1929


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்!
(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.



| மலர் | உத்தமபாளையம். விபவ௵ மார்கழி௴ | இதழ் |
|---|---|---|
| 2 | 1928௵ டிசம்பர்—'29௵ ஜனவரி௴ | 9 |


## கடவுள் வணக்கம்.

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பியூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே யவானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்தும்
கடன்மடை திறந்தனைய வன்பான் பக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(தாயுமானவர்)

# நமது "ஏல விவசாயி"

1591618

வெண்பா.

சீராரு [illegible]க்குத் திருவாங்கூ ரென்றவியற்
பேரால் வந்ததெனப் பேசிடலவ்—வூராரும்
ஏலவிவ சாயிகளா மிவர்க்குயிரா யிலங்குவதார்
ஏலவிவ சாயிவ னே. (1)

பொன்வாங்கூ ரென்னப் புகழ்வந்த தன்னியர்கள்
பின்வாங்கா திடைக்கிடையன் யன்பினிற்கொடுக்கப்—பொன்
ஏலவிவ சாயத்தா லெனும்பெருமை தந்தவனார் [வாங்கும்
ஏலவிவ சாயிவ னே. (2)

மற்றதொழில் யாவுமடி மைத்தொழிலுண் மைத்தொழிலாய்
உற்றதொழில் யாதெனவிங் குய்த்துணர்ந்து—சொற்றதொழி
யேலவிவ சாயதொழி லென்பதையு ணர்த்தியதார்
ஏலவிவ சாயிவ னே. (3)

தன்னாட்டம் வேறின்றித் தாழ்வுநிலை தவிர்ந்தேக
முன்னாட்டு நன்னலங்கள் முழுதுமினி—இன்னாட்டி
லேலவிவ சாயமென வித்தொழில்கொ ளுத்தமன்யார்
ஏலவிவ சாயிவ னே. (4)

கலையேற்று மிப்பணியைக் கையேற்ற வரையுயர்ந்த
நிலையேற்று மியல்பாந்த னெறிக்கேற்ப—மலையேற்றி
ஏலவிவ சாயிகள்முன் னேற்றமுறப் போற்றுவதார்
ஏலவிவ சாயிவ னே. (5)



அன்னியநாட் டிப்பொருளுக் கங்காத் திருப்பதினும்
தன்னிடத்து ளதையவர்க்குத் தானறுப்பில்—நன்னயமென்
றேலவிவ சாயஞ்செய் தெங்கெங்கும் போக்குவதார்
ஏலவிவ சாயிவ னே. (6)

பாமலையின் மீதே மருந்திருக்க வுண்ணாட்டில்
தாமலையு மிடிநோயர் தமக்காக—வேமலையா
தேலவிவ சாயஞ்செய் தின்னமுத மூட்டுவதார்
ஏலவிவ சாயிவ னே. (7)

மதந்தரவர் ததுவென்ன வஞ்சகர்செய் பேதத்தால்
நிதந்தாமி முந்தலைகீழ் நிலையினர்க்குச்—சுதந்தரமாம்
மாலவிவந் திடச்சமத்வ வாழ்க்கைதரு புண்ணியனார்
ஏலவிவ சாயிவ னே. (8)

இக்குந்த னக்கிணையி லித்தமிழ்நா டன்றியெட்டுத்
திக்குந்தி ரிந்தவிடத் திற்சம்ப—விக்குந்தற்
காலவிஷ யங்களெல்லாங், கண்டுவந்து சொல்பவனார்
ஏலவிவ சாயிவ னே. (9)

வாசாம கோசாநல் வாக்கால்து ரைத்தனர்பால்
கூசாமற் பேசிக் குறையிரந்து—தேசாரு
கூலவிவ காரியெவன் கூட்டுமுப காரியெவன்
ஏலவிவ சாயிவ னே. (10)

வாயகமே குளிரநலம் வழங்கல்போற் புவிக்கினமும்
தாயகமே காட்டிபல சஞ்சிகைக்கோர்—நாயகமே
போலவிளக் கம்படைத்துப் பூவுலகி லேவாழ்க
ஏலவிவ சாயிவ னே. (11)

சுபம்! சுபம்!!

M. S. சுந்தரம்.

# "ஏல விவசாயி"ப் பத்திரிகையைப் பற்றி

சென்ற மாதத்திலும் "ஏல விவசாயி"ப் பத்திரிகையைப்பற்றி எழுதினேன். இதைப்பற்றி அடிக்கடி எழுதுவதைப்பற்றி மிகவும் விசனிக்கிறேன். எழுதும்படியான சங்கட நிலைமை உண்டாகிக்கொண்டிருக்கிறது. பணக்கஷ்டம் பத்திரிகைகளுக்கு உதவாது. "ஹிந்து" முதலிய சில பத்திரிகைகள் வறுமையிலே பிறந்து வறுமையிலே வளர்ந்து இப்பொழுது செல்வத்திலே திகழ்ந்துகொண்டிருக்கின்றன. நமது பத்திரிகையின் முறையே வேறு. கிளைச் சங்கத்தாரிடம் நான் அடிக்கடி சென்றுகொண்டிருக்கவேண்டும். ஒருகிளைச்சங்கத்தின் காரியதரிசி தெய்வாதீனமாய் என்மீது பிரியமற்றவராயிருந்தால், எனக்கு அச்சங்கத்தில் அடிக்கடி அலைச்சல்தான். இதை விரிக்கில் பெருகும். பத்திரிகை விஷயத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று தலைவர்களை அடிக்கடி கேட்டு அலுத்துவிட்டேன். ஸ்டாம்பு வாங்குவதற்குக்கூட எத்தனையோ தடவைகளில் பணமில்லாதிருந்தது. எனது பிரிய நண்பர்கள் உதவினார்கள். வட்டிக்குப் பணம் வாங்கிப்போட்டுப் பத்திரிகையையை ஒரு சங்கத்திற்காக ஒருவரும் நடத்த முன்வரமாட்டார்கள். எத்தனையோ அனாவிஷயங்களுக்குச் சங்கத்தின் பணம் அள்ளி அள்ளி எறியப்படுகிறது. இப்பத்திரிகை விஷயத்தைத் தலைவர்கள் அறிந்தும் அறியாததுமாதிரி மௌனமாக இருப்பது நியாயமன்று. பணக்குறைவு மட்டுமா இப்பத்திரிகைக்கு? சுருக்கமாக மற்றவைகளைக் கவனிப்போம். இந்தமாதிரியான பத்திரிகையை ஒரு கிராமத்திலிருந்துகொண்டு நடத்துவது மிக மிகக்கஷ்டமான காரியமென்று இந்தக் குறுகிய கால அனுபவம் எனக்கு வெகு நன்றாய்க் காட்டியிருக்கிறது. பணம் கொடுப்பவர்கள், விஷயதானிகள், காகித வியாபாரிகள், அச்சு வேலைக்காரர்கள் முதலியவர்கள் சரியாக இருந்தால்தான் ஒரு பத்திரிகை நன்கு நடைபெறும்; அதிக விஷயங்களைத் தாங்கிக்கொண்டு காலாகாலத்தில் வெளிவரும்.



இப்பக்கத்திலுள்ள வியாசதானிகளைப்பற்றி என்ன எழுதுவதென்று எனக்கே தோன்றவில்லை. எழுதக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு ஏல விவசாயத்தில் அனுபவம் இல்லை. ஏல விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு எழுதக்கூடிய திறமை கிடையாது. சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வியாசங்கள் எழுதியனுப்ப வேண்டுமே என்ற எண்ணமே கிடையாது. அடிக்கடி கேட்டால், வேலை வேலை என்றே எப்பொழுதும் அன்பாகப் பதில் சொல்லிவிடுகிறார்கள். சிலர் தங்களின் வியாசங்களினால் பத்திரிகையின் மூலம் தங்களுடைய பகைமையைக் காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். சிலர் வியாபாரிகளைமட்டும் மனம்போனபடி தாக்கித் தாக்கி வரைந்தனுப்புகிறார்கள். உலகமே வியாபாரமயமாயிருக்கிறது. வியாபார அரசர்களை மறந்துவிட்டு வியாபார சமூகத்தையே தூற்ற இவர்கள் ஆரம்பிக்கிறார்கள். பிறர் குற்றங்களை எடுத்துக்காட்டுவதைக் காட்டிலும் நமது குறைகளைக் கண்டறிந்து சீர்திருத்தம் அடைவதே மேலானது. உயர்ந்த உற்சாகமுள்ள வியாசங்களை நமது ஏல விவசாயிகளில் படித்தவர்கள் எழுதியனுப்புவது கிடையாது. சுருக்கமாயேனும் தங்களுடைய அனுபவங்களைக் கூட ஏல விவசாயிகளில் அனுபவம் பெற்று வியாசம் எழுதக்கூடியவர்கள் எழுதியனுப்புவதில்லை. சில சமயங்களில் நானே எல்லாவற்றையும் எழுதிப் பத்திரிகையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. இப் பத்திரிகையை சற்று உயர்தரத்தில் நடத்துவது எவ்வளவு கஷ்டமென்று பத்திரிகானுபவம் சிறிதுபெற்ற எவருக்குமே நன்கு தெரியும். எனது நண்பர்களில் அநேகர் பொதுவிஷயமாக எழுதக்கூடியவர்கள். இது ஒரு பொதுப் பத்திரிகையாயிருந்தால் எனக்கு எவ்வளவோ இலகுவாயிருக்கும். சுமார் 10 பத்திரிகை நடத்துவதும் சரி இம்மாதிரியான ஒரு பத்திரிகை நடத்துவதும் சரி. அயலூர்களிலிருந்து சில நேயர்களும் மலையிலிருந்து ஒருவரும் எழுதுவதைத் தவிர்த்து எவர் இப்பத்திரிகைக்கு எழுதுகிறார்? என்பதைத் தயவுசெய்து யோசியுங்கள். ஒரே ஒரு மனிதன் மட்டும் எழுதிக்கொண்டிருந்தால் பத்திரிகைப் பயனுள்ளதாயிருந்தாலும், அவ்வளவு ருசிகரமாயிராது.

காகித வியாபாரிகளைப் பற்றிச் சாதாரண ஜனங்களுக்கு தெரிவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. நமது பத்திரிகை அச்சாகி வரும் 14 பவுன் காகிதம் மதுரையில் அதிகம் கிடையாது. சென்னையிலிருந்து காகிதம் மதுரைக்கு வரும் வரைக்கும் சில சமயத்தில் காத்திருக்கவேண்டியிருக்கிறது. கையில் போதிய பணம் மீதியில்லாதபடியால் அதிகமாகக் காகிதத்தை வாங்கிவைத்துக்கொள்ள முடியவில்லை. திடீரென்று ஏற்படும் காகிதப் பஞ்சத்

தால் விஷயங்களை அப்படியே சுருக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இக்காரணம்பற்றியே எத்தனையோ தடவைகளில் பத்திரிகை தாமதமாய் வெளி வந்திருக்கிறது.

அச்சாபீஸில் பல தொல்லைகள். அத்துடன் ஆதியில் பைண்டிங்வேலை எங்கள் பிரஸில் இல்லாததால், அனுபவமற்ற தொழிலாளர்களால் தைத்த புஸ்தகங்களை மோட்டாரில் வைத்துக்கொண்டு பெரியகுளத்திற்கோ மதுரைக்கோ வெட்டும்பொருட்டுப் போகவேண்டியிருந்தது. மிகவும் கஷ்டம். சிரமங்களையும் செலவுகளையும் சிந்தித்தே பத்திரிகைகள் வெட்டப்படாது அனுப்பப்பட்டன. இப்பொழுது இக்கஷ்டம் ஒரு வழியில் ஒழிந்தது. என்றாலும் இனியும் இப்பத்திரிகைப் பல வழிகளில் அபிவிருத்தி அடைய வேண்டியிருக்கிறது.

அடுத்துத் தபால் விஷயம் வருகிறது. எல்லாக்காரியங்களையும் முடித்துக்கொண்டு போஸ்ட்மாஸ்டர் மூலம் ஸ்டாம்புக்காக மதுரை ஹெட் போஸ்ட்மாஸ்டருக்கு எழுதும்படி செய்துவிட்டு, ஸ்டாம்புகள் வரும்வரைக் காத்திருக்கவேண்டும். ஸ்டாம்பு ஒட்டிய பத்திரிகைகளை தபால் ஆபீசில் சேர்த்தவுடன் அனுப்பிவிடமாட்டார்கள். கோம்பை, தேவாரம் முதலிய விடங்களுக்கும், காமய கவுண்டன்பட்டிப் பக்கங்களுக்கும் குச்சனூர் வட்டங்களுக்கும் ரன்னர் மூலமாகவே உத்தமபாளையம் தபால் ஆபீஸிலிருந்து அனுப்பப்படுகின்றன. இப்பத்திரிகைகளை பட்வாடா செய்வதில் தபால்காரர்கள் மிகுந்த தாமதம். "அவருக்கு மட்டும் "ஏல விவசாயி" வந்தது. எனக்கு மட்டும் ஏன் வரவில்லை" என்று சிலரின் கூக்குரல். சந்தா ரிஜிஸ்டர் எங்கள் ஆபீசில் இருக்கிறது. அனுப்பப்படும்பொழுது பத்திரிகைகள் சரிபார்த்தே அனுப்பப்படுகின்றன. இனியும் என்ன செய்யட்டும்? தபால்காரர் பத்திரிகையை பட்வாடா செய்யும் வரையில் ஆசிரியராகிய நான் கூடவே இருப்பதா? அல்லது ஆட்களை அனுப்புவதா? கிளைச் சங்கங்களின் மூலமாய்ப் பத்திரிகைகளை அனுப்பினால், அநேகருக்குச் சரியாய்க் கிடைப்பதில்லை யென்று கேள்விப்பட்ட பிறகே, சென்ற 5, 6, மாதங்களாகப் பத்திரிகைகள் தபாலில் அனுப்பப்பட்டு வருகின்றன வென்பதை ஒவ்வொரு ஏல விவசாயியும் கவனிக்கவேண்டும்.

"ஏல விவசாயி"ப் பத்திரிகையை நம்பி நம்பி அச்சில் அதிக நஷ்டமேற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பத்திரிகையினால் போதிய லாபம்



கிடையாது என்று பன்முறை சொல்லியிருக்கிறேன். பணம் மீதமின்மையால் "ஏல விவசாயி"ப் பத்திரிகைக்காக ஒரு பியூன்கூட இன்னும் அமர்த்த முடியவில்லை. குறைந்தது உற்சாகம்கூட ஏல விவசாயிகள் எனக்குக் கொடுக்கவில்லை யென்று வருந்துகிறேன். போடிநாயக்கனூர் தலைமைச் சங்கத்தின் கனம் காரியதரிசி அவர்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்தது பெயரளவில் முடிந்தது. இன்னும் இங்கு குறிப்பிடமுடியாத அநேக கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு இம்மாசிகையை நடத்துகிறேன்.

பம்பாயில் பிரபல ஆசிரியர் மிஸ்டர் ஹார்னிமன் நடத்திவரும் பத்திரிகையான "இந்தியன் நேஷனல் ஹெரால்ட்"க்கு லட்சக்கணக்கான நஷ்டம். பம்பாய் முடிசூடா மன்னராய் விளங்கிய சர் மேதா ஸ்தாபித்த பேர்போன "பம்பாய் கிராணிகில்" பத்திரிகைக்கு எவ்வளவோ நஷ்டம். அன்னை பெசண்டு அம்மையார் நடத்திவரும் "நியூ இந்தியா" பணமின்றி நின்றது. இப்பொழுதும் பணத் திண்டாட்டத்துடன் நடக்கிறது. இவ்வாறு பல காரணங்களை அடுக்கிக்கொண்டு போகலாம். பல பத்திரிகைகளின் கதைகளை அறிந்த நான் இதை நம்பிக்கையுடன் நடத்துகிறேன். ஏல விவசாயிகள் போதியபடி ஆதரவு அளிக்காவிடினும் (அச்சு வாங்குவதற்காக சில சங்கங்கள் கொடுத்திருக்கின்றன) எனது கடமையில் நான் தவறவில்லை.

எனது கஷ்டங்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டேன். இந்தமாதிரி நடந்தால், "ஏல விவசாயி"ப் பத்திரிகை எப்படி நடக்கும்? என்று தாங்களே யோசித்துப்பாருங்கள். சந்தாத் தொகைகளை சில கிளைச் சங்கங்கள் ஒழுங்காய்க் கொடுப்பதில்லை. இரண்டொரு கிளைச் சங்கங்கள் இம்மாசிகை விஷயத்தில் மிகவும் பாராமுகமாய் இருக்கின்றன. சில அச்சு வாங்குவதற்கு ஈவுத்தொகையைக் கொடுக்க மறுக்கின்றன. யுக்திவாதம் பேசுவதில் பயிற்சிபெறா நான் இதற்காக வாக்குவாதத்தில் எப்படிப் பிரவேசிக்கட்டும்? இப்படி யிருந்தால் "ஏல விவசாயி"யை நடத்தமுடியாத கஷ்டநிலை சமீபத்தில் வந்துவிடும் என்று எச்சரிக்கிறேன். "ஏல விவசாயி"ப் பத்திரிகைக்கு என்று நற்காலம் வருமோ? தலைவர்கள் இதை நன்கு கவனிக்க வேண்டுகிறேன்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

## T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியின் முதலாவது வருடப் பொதுக் கூட்டம், கோம்பை.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியின் முதலாவது வருட மகா சபை கோம்பையில் டிசம்பர்மீ 8, 9உ களில் ஷை கம்பெனியின், தலைவர் ஸ்ரீமான் திருமலைசப்பு செட்டியாரவர்கள் அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது ஏல விவசாயிகளுக்கு மகா மகிழ்ச்சியே. கம்பெனியின் பங்குக்காரர்கள் மிகவும் உற்சாகத்துடன் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆஜராகாத அநேகர் அவர்களது அதிகாரப்பத்திரங்களை அனுப்பியிருந்தனர். இப்பாகத்திலுள்ள ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை விற்பதற்கு இம்மாதிரி ஒற்றுமையாய்ச் சேர்ந்து கம்பெனியொன்று ஸ்தாபித்து நடத்துவது இப் பிரதேசத்தில் இதுவே முதல் தடவையாகும். ஏல விவசாயிகளை ஒன்றுபடுத்திக் கட்டுத்திட்டங்களுடன் நடக்கும்படி செய்யும் சுதேசிகளின், லிமிடெட் கம்பெனி இது ஒன்றுதானென்று மறுபடியும் கூறலாம். சில ஏல விவசாயிகளின் மக்களுக்கு வியாபாரப் பயிற்சி இக் கம்பெனி கொடுத்துக் கொண்டிருக்கிறது போற்றற்குரியதே. இன்னும் சொற்ப காலத்திற்குள் 100க் கணக்கான நமது வாலிப மக்களை வியாபாரத் துறையில் இக் கம்பெனி பழக்குமென்ற நம்பிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. அறிவிலும் ஆற்றலிலும் மிகுந்த ஏல விவசாய யௌவனர்களைத் தெரிந்தெடுத்து ஆண்டுதோறும் அதிகமானவர் ளை வியாபாரப் பயிற்சிக்கு அனுப்பவேண்டுமென்பது எனது விருப்பம். பம்பாய், கல்கத்தா, காராய்ச்சி, கான்பூர் முதலிய வட இந்தியாவிலுள்ள அநேக வியாபாரஸ்தலங்களை ஏல விவசாயிகளுக்கு மிகச் சுலபமாய்ச் செய்துவிட்ட பெருமை T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனிக்கே உரியது.

கூட்டம் கூடியவுடன் கூட்டாளிகளைக் கம்பெனியின் மானேஜிங் டைரெக்டர் இன் வரவேற்று முகமன்கூறி உருக்கமாய் ஒரு வியாசத்தை



வாசித்தார். அவர் கம்பெனிக்கு செய்திருக்கும் ஒழுங்கான ஊழியமும் அதிக தியாகமும் அதில் பரிமளித்தது; ஆத்திரம் நிறைந்திருந்தது; ஆவேசம் பெருகியிருந்தது. பின்னர் பல பேச்சுக்களுடன் கணக்கு அங்கீகரிக்கப்பட்டது. 100-க்கு 15-க்குக் குறையாமல் ஒதுக்கி வைக்க வேணுமென்று கம்பெனியின் விதிகளில் கண்டிருந்தபோதிலும், 100-க்கு 23 வீதம் க்ஷேமநிதிக்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நல்ல விஷயமே. ரசாயன ஆராய்ச்சி, கைத் தொழில் அபிவிருத்தி முதலியவைகளுக்கு ரூ 8425-7-8 சேர்த்து வைத்திருப்பது மிகச் சரியே. எல்லாச் செலவுகளும் போக 100-க்கு $33\frac{1}{3}$ லாபம் முதல் வருடத்திலே கிடைத்திருப்பது இக் கம்பெனியின் பெருமையைக் காட்டுகிறது. ஆரம்ப வருடத்திலே பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலே சில நஷ்டங்களுக்கிடையிலே இவ்வளவு இலாபம் கிடைப்பதற்குக் காரணம் கம்பெனி டைரெக்டர்களின் குறையா உற்சாகமும், குன்றா ஊக்கமும், விடா முயற்சியும், தீவிரமான உழைப்புமேஎன்று சொல்லத் தயங்கவேண்டியதில்லை. கம்பெனியின் வேலையைத் தன் வேலையென மதித்து உண்ணும் நேரமும் உறங்கும் நேரமும் தவிர்த்து அல்லும் பகலும் கம்பெனிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் மானேஜிங் டைரெக்டர் ஜனாப் மொகைதீன் பிள்ளை ராவுத்தரவர்களின் சேவை மெச்சத்தக்கது. பெரிய பெரிய அயல்நாட்டுக் கம்பெனிகள் போன்று இக் கம்பெனிக்கு நல்ல இலாபம் கிடைத்திருப்பதைப் பற்றி நாம் சந்தோஷமடைய வேண்டும்.

இது குடியானவர்களுடைய கம்பெனி. விதிகளைச் சற்று தளர்த்தியே பிரயோகிக்கவேண்டிய ஜனங்களாயிருக்கிறார்கள். ஜனங்களிடை கம்பெனியைப் பற்றி இன்னும் அதிகமாகப் பிரசாரம் செய்யவேண்டியதிருக்கிறது. புதிதாகத் தேர்ந்தெடுத்த 13 டைரெக்டர்களுக்கு நல்வரவு கூறுகிறேன். இவர்களுடைய உயரிய யோசனைகளும் தீவிர உழைப்பும் கம்பெனிக்கு இவ் வருடத்தில் உபயோகமாகட்டும்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

## *T. C. P. A.* ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி (*Ltd.,*)

### முதல் வருட மகா சபை,

### போடி.

டி மானேஜர் உ. ம. சே. முகியித்தின் பிள்ளை ராவுத்தரவர்கள் வாசித்த வியாசம்.

கம்பெனி மெம்பர்களாகிய
பங்காளிகளே! கனவான்களே!!

இந்த மகா சபையில் உங்களின் அருமையான நேரத்தைவீண் வாய்ப்பேச்சு மூலம் வினாடிப்பொழுதையும் வெறும்வீணாக்க எனக்குப் பிரியமில்லை. என்றாலும் பழைய காலம் மலையேறி விட்டது என்று கூட்டங்கள்தோறும், மேடைகள்தோறும் பல கல்விமான்கள் தொண்டை கிழியக்கத்துவதையும் பல பத்திரிகைகளில் பத்திபத்தியாக வியாசங்கள் பிரசுரமாவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள், கேட்டுமிருப்பீர்கள். நமது நாட்டைப்பிடித்த சனியன் இன்னும் விட்டபாடில்லையென்று லாலாஜீகளும், நேருகளும் அடிபட்டு மடியும்போது ஏல விவசாயிகளைத் தற்சமயம் பிடித்தாட்டுஞ் சனியன் தொலையவேண்டுமானால், என்னையொத்த ஊழியர்களிற் பலரைப் பலிகொடுத்தாலொழிய விமோசன மேற்படாதென்று பலர் கருதியிருப்பதாகத் தெரியவருகிறது. மரணத்திற்கு யார் பயந்தபோதிலும் எமன் விட்டுவிடப்போவதில்லை யென்பதை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். ஏல விவசாயிகளின் நன்மைக்காக என்னுயிரைப் பலி கொடுப்பதில் எனக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை யென்றாலும், பணந்தான் தேவை யென்று கருதிப் புதையலிருப்பதாக இணக்கங் காட்டி அப்படித்தான் செய்ய வேண்டுமென்று நியாய ஹீனமாய்க் கூறும் கோடாங்கியின் பேச்சை நம்பி; அதாவது நமது கம்பெனியின் நன்மைக்கு விரோதமாகப் பிரசாரஞ்செய்யும் விரோதிகளின் வார்த்தைகளுக்குக் கழுத்தையறுக்கத்துணியும் பேராசைக்காரர்களுக்காக என்னுயிரைப்



போக்குவதில் உங்களுக்குப் பிரியமிருக்காதென்றே நம்புகிறேன். விஷயத்தை விரிக்கவாவது கதையை வளர்க்கவாவது நான் தயாரில்லை.

ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கருதியே நமது கம்பெனி ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது என்று கூறுவதில் யாருக்காவது ஆக்ஷேபனையுண்டா? அப்படிப்பட்ட ஆக்ஷேபனையிருந்தால் அதற்கு வேண்டிய பரிகாரங்கள் தேடவேண்டியதை விட்டுவிட்டுச் சந்தர்ப்பத்திற்குத்தக்கபடியெல்லாம் செய்யத்துணிவதும், பேசுவதும் கூடாதென்றுமாத்திரம் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். தவிரவும் நமது கம்பெனியின் நன்மையைப் பிரதானமாக வைத்து உன்னத நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்றகருத்தோடு நான் இதில் தலையிட்டுப்பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் வேலைசெய்கிறேனென்று உங்கள்முன் நிச்சயமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். என் வேலையாற் சிலருக்குப் பிரியமும், பலருக்கு அதிருப்தியுமிருக்கலாம். அதற்காகக் கம்பெனியைக் குறித்துக் குறை கூறாமல் தகுந்த ஆட்களை நியமித்து வேலை வாங்கிக்கொள்வது நல்லதென்று மாத்திரம் நினைப்பூட்டி வைக்கின்றேன்.

மேல்நாட்டு வாசிகள் உன்னத நிலைமைக்கு வந்திருப்பதற்கு முக்கிய துணை கம்பெனிகளேயாகும். நமது ஜனங்கள் கம்பெனி முறைகளிற் பழக்கப்பட்டவர்களல்ல. இந்தப் பக்கத்தில் பல கம்பெனிகளேற்பட்டு நடைபெற்று வந்தபோதிலும், அநேக ஜனங்களின் கூட்டுறவைத் தேடி வேலை செய்வது நமது கம்பெனி ஒன்றேயாகும். ஆனால் விவசாயிகளாகக் கூடி ஸ்தாபிக்கப்பெற்ற கம்பெனிகள் நம் பக்கங்களிலேயே இல்லையென்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். கம்பெனி, கம்பெனியென்பது ஐக்யம், கூட்டு, ஒற்றுமை, சமரசம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற அர்த்தங்களைத் தரத்தக்கதேயொழிய, பேராசை, பெரிய ஆதாயம், சுயலாபம், ஆளுக்குத்தக்க பேச்சு, பேச்சுக்குத் தக்க பதவி என்ற அருத்தத்தைத் தரக்கூடியதல்ல வென்பதை நீங்களறிவீர்கள்.

நமது கம்பெனியோ நேற்று (சென்ற வருடத்திற்)ப்பிறந்த கைக்குழந்தை; சிறு குழந்தைகளை எவ்வளவு அருமை பெருமையாகப் பாராட்டிச் சீராட்டிப் போஷிக்க வேண்டுமென்பதை அநுபவசாலிகளாகிய உங்களுக்கு விரித்துரைக்கத் தேவையில்லை. ஆனால் கைக்குழந்தைகளைத் தரையில் போட்டுவிட்டு நமது வேலையை மாத்திரம் பிரதானமாகக் கருதிக்கொண்டிருந்தால், பசியெடுத்த குழந்தை தொண்டை கிழியக் கத்தி மயக்கமுற்றுச் சோர்வடைந்துவிடும். அதற்குப்பின் பாலூட்டுவோமா, சீராட்டுவோமா என்று கவனிக்கத் துணிவது கூடாது. குழந்தைக்குத் தேவையுள்ள சமஸ்த சௌகரியங்களையும், நாமே தேடிக்கொடுக்காவிட்டால் குழந்தையின் கதி யென்னாகு மென்பதை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

ஓர் குழந்தையின் அபிவிருத்திக்கும், ஓர் கம்பெனியின் லாபத்திற்கும் வழியுண்டாக்க வேண்டிய பொறுப்புக்கள் யாரிடத்திலிருந்து வருகிறதென்பதை நன்றாய்க் கவனியுங்கள். எந்த விஷயங்களிலும் ஆரம்பத்தில் கஷ்டமும் நஷ்டமுமே சம்பவிக்கும். கஷ்ட நஷ்டமேற்படாத விஷயங்கள் நல்ல பயனைக் கொடுக்கமாட்டாதென்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால் எந்தத் தொழிலையும் எவருஞ் செய்துவிடலாமென்று எண்ணுவதும், பேசுவதும் மிக மிக எளிது. அவைகளைச் செய்து பார்த்தால்தான் அதினுடைய அருமை, பெருமை சிரமம் எவ்வளவென்பது விளங்கும். கம்பெனியின் அபிவிருத்திக்கும், தொழில் நடப்பிற்கும் இந்த மகாசபையார் தகுதியான டைரெக்டர்களைத் தெரிந்தெடுத்துக்கொடுப்பதும், உண்மையுள்ள ஆடிட்டர்களை நியமிப்பதும், சட்ட திட்டங்களிலுள்ள குறைகளைச் சீர்திருத்துவதுந்தான் முக்கியமான கடமை, அவசியமான விஷயம். ஆகையால் உங்கள் காலத்தை வீணாக்காமல் மேற்குறிப்பிட்ட மூன்று விஷயங்களையும் விரைவில் பூர்த்தி செய்விக்கத் துணியுங்கள். நமது கம்பெனியின் ஆதாயத்தில் எந்தெந்தப் பண்டுகளுக்குப் பணம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் திட்டப்படுத்தியிருக்



கிறதோ அதையநுசரித்துக் கடந்த வருடத்தில் நமது கம்பெனிக்குக் கிடைத்த ஆதாயத்தில் சொற்பத் தொகைகள் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் க்ஷேம நிதிக்கு 100-க்கு 15-க்குக் குறையாத தொகையை ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்று நமது கம்பெனிச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறதை யநுசரித்து 100-க்கு 23 வீதம் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால் ஓர் கம்பெனியின் அபிவிருத்திக்கு மூலதனமானது வேளாண்மையாகவும், க்ஷேமநிதியானது வேலியாகவுமமைய வேண்டியிருக்கிறபடியால், மேற்சொல்லியபடி 100-க்கு 23 வீதம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

அறிவாளிகளே!

உலகத்தில் நடைபெறும் பெரிய தொழிற்களெல்லாம் கம்பெனி முறையிற்றான் நடைபெற்று வருகிறது. உதாரணமாக உலகமெல்லாம் வியாபித்திருக்கும் பாங்குகள், ரெயில்வேக்கள், நெசவு சாலைகள், கப்பல்கள், தந்திச்சாலைகள் முதலியவை முக்கால் பங்கு கம்பெனி முறையிலிருந்து வருகிறதென்பதை நீங்களறிந்திருப்பீர்கள். ஆகையால் அவைகளை யநுசரித்து ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிற நமது கம்பெனியையும் நல்ல விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள். சொந்த மனஸ்தாபங்களையாவது சொந்த லாபத்தையாவது எதிர்பார்த்துப் பொதுக் காரியங்களுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள். நமது கம்பெனியை நீங்கள் எவ்வளவு அன்போடும், ஐக்கியத்தோடும் நேசிக்கிறீர்களோ அவ்வளவிற்குத் தக்கபடி லாபமும், புகழுமுண்டாகு மென்றுமட்டும் நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். விதை விதைத்தவுடன் பலனையடைய விரும்புவது தகுதியா? "நெல்லறுக்க ஓர்காலம் புல்லறுக்க ஓர் காலம்" என்ற பழமொழியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நமது கம்பெனியை ரிஜிஸ்டர் செய்வித்துப் பதினாறு மாதங்களேயாகின்றன. இதற்கிடையில் பனிரெண்டு மாதத்திய

வரவு, செலவு, லாப நஷ்டக் கணக்குகள் உங்கள் முன்னால் வந்தி
ருக்கின்றன. இதில் மூன்று ரூபாய் கொடுத்த பங்கு 1-க்கு ஒரு
ரூபாய் லாபம் பிரித்துக் கொடுக்கும்படி டைரக்டர்கள் சிபார்சு
செய்திருக்கிறார்கள். இந்த லாபமானது நமது கம்பெனியில்
நடைபெற்ற வியாபாரத்தன்மைக்கு நீங்கள் எதிர்பார்த்திருந்ததை
க்காட்டிலும் குறைந்த தொகையென்றாலும் உலகத்தில் நீண்ட
காலமாக நடைபெற்று வந்திருக்கும் எந்தக் கம்பெனியும் ஆரம்ப
வருடத்திலேயே இவ்வளவு பெரிய ஆதாயத்தைப் பிரித்துக் கொ
டுக்கவில்லையென்று நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள்; நானும்
நிச்சயமாய்ச் சொல்லுகின்றேன். பங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய்
லாபத்தைத் தவிர பங்காளிகள் செலுத்திவைத்த தொகைகளுக்
கும் மீ 1-க்கு 100-க்கு ஒரு ரூபாய் விதம் வட்டியும் பிரித்துக்
கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 100 ரூபாய்
முதல் வைத்தவர்களுக்குக் கிட்டத்தட்ட 45 ரூபாய் ஆதாயங்
கிடைத்திருப்பது எவ்வளவு சிலாக்கியமான லாபம்யென்பதை நீங்
களே யூகித்துக்கொள்ளுங்கள்.

கம்பெனியின் நடை முறை விஷயங்களிலும், வேலை நடப்புக்
களிலும் சிலமெம்பர்கள் அடிக்கடி குறுக்கிட்டு நடப்புக்களை விசா
ரிப்பதும் புதுப்புது ஆலோசனைகள் கூறுவதும் என்னையொத்த
ஊழியர்களுக்கு ஒத்தாசையான செய்கையே யென்றாலும், கம்
பெனியின் சட்டத்திற்கும் வியாபாரரீதிக்கும் நேர் விரோதமான
காரியமென்பதை மட்டும் உங்களுக்கு நினைப்பூட்டி வைக்கின்
றேன். தவிரவும் நமது கம்பெனிக்கு நல்ல மதிப்பும், தக்க லாப
மும் கிடைக்கவேண்டுமென்று நீங்கள் கருதும் பட்சத்தில் கம்பெ
னியின் சட்ட விதிகளுக்கு மீறிய விஷயங்களில் நீங்கள் தலையிடா
மலும், கம்பெனியைக் குறித்துக் குறை கூறுகின்றவர்களின் வார்
த்தைகளுக்குச் செவிசாய்க்காமலும் இருந்து நிர்வாக போர்ட்டார்
செய்யும் தீர்மானங்களைப் பின்பற்றி நடந்துகொண்டால் எல்லாம்
எளிதிலெய்தும். "கள்ளுவிற்றுக் கலப்பணஞ் சம்பாதிப்பதிலும்



கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பதிப்பது மேல்" என்றார் ஆன்
றோர். பிறரை வஞ்சித்து ஆயிரம் அடைவதைப் பார்க்கிலும்,
ஐக்யப்பட்டு ஆளுக்கரைப் பைசாக் கிடைத்தாலும் எவ்வளவோ
மேன்மையென்பதை நான் சொல்லாமலே நீங்கள் அறிந்துகொள்
ளலாம்.

நம்முடைய ஐக்யங்கள் மற்றவர்களின் பார்வைக்கு ஸ்திரமற்
றுத் தோன்றுவதினால் திருட்டுச் சரக்குகள் வாங்கும் வியாபாரி
கள் ஒரு பக்கமும், திருடர்கள் ஒரு பக்கமும் தாக்குகிறார்களென்
பதை நீங்களறியவில்லையா? சுயநலக்காரர்களின் சூழ்ச்சிகள்பரவி
நமது ஏலவிவசாயிகளை நஷ்டப்படுத்திக்கொண்டிருப்பதை நீங்கள்
காணவில்லையா? துன்மதி வணிகர் மத்தியிலும், சுய நலத்தை
நாடிய போலித்தலைவர்கள் பக்கத்திலும் நமது கம்பெனி ஸ்தாபிக்
கப்பெற்றிருக்கிறதென்பதையறிந்து ஐக்யத்தோடு விஷயங்களைச்
சம்பூர்ணமாக்குங்கள்.

நமது மெம்பர்களிற் சிலர் ஆரம்பத்தில் ஏலச் சரக்குகளைக்
கம்பெனியில் கொண்டுவந்து ஒப்புவிக்காமல் விற்பனை செய்திருக்
கிறார்கள். இப்போதும் சிலர் விற்பனை செய்வதாகக் கேள்விப்படு
கிறேன். அதுவிஷயமாகக் கம்பெனி டைரக்டர்கள் ஆரம்பத்தில்
செய்திருக்கிற தீர்மானத்தை நீங்கள் ஊர்ஜிதப்படுத்தி ஐக்யத்தை
பலப்படுத்துங்கள். (யானை தன் தலையில் மண்வாரிப் போட்டுக்
கொள்வதுபோல) சில மெம்பர்கள் தக்கோல் முதலிய மட்டச்
சரக்குகளைப் பட்டிமாறிகள் கையில் விற்பனை செய்வதால் நமது
மெம்பர்களின் நல்ல சரக்குகளுக்கும் தக்க விலை கிடைக்காமற்
போவதை இவர்கள் உணரவில்லையே. இனியாவது எல்லாச் சரக்
குகளையும் கம்பெனியிலேயே ஒப்புவித்து வரவேணுமாய்த் தெரி
யப்படுத்திக் கொள்ளுகிறேன். அரைக்காசுக்கு இழந்த மானம்
ஆயிரம் பொன் கொடுத்தாலும் திரும்பி வராது. மானத்தை
மறைப்பதற்கே வேஷ்டி கட்டப்படுகிறது. ஏல விவசாயிகளின்
நன்மைக்காகவே கம்பெனி ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. நமது

கம்பெனிக்கு விரோதமாக யார் யார் எதைச் சொன்ன போதிலும் அவைகளை வகை வைக்காமல் நமது கம்பெனியின் சட்ட திட்டங்களுக்கிணங்கி நிர்வாகப் போர்ட்டாரின் தீர்மானங்களைப் பின்பற்றி நடந்துகொள்வீர்களேயாகில், நமது கம்பெனிக்குத் தக்க மதிப்பும் மிக்க லாபமும் கிடைப்பதோடு, உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் அழியாப் புகழும், குறையாச் செல்வமும் எளிதாய்க் கிடைக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லி, நீங்கள் வந்து கூடிய காரியத்தைப் பூர்த்திசெய்விக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன். கடவுள் கிருபையையும், உங்கள் ஆசீர்வாதமும் கம்பெனியின்பேரில் எக்காலுமிருக்கும்படி எல்லாம்வல்ல இறைவனை நானும் மன்றாடுகின்றேன். நீங்களும் பிரார்த்தியுங்கள்.

---

# பொருளும் பொருள் செய்வகையும்.

## பொருள்

பொருள் என்பதற்குச் செல்வம் என்று பொருள் கூறலாம். அச்செல்வம் பணத்தின் உருவத்திலாயினும், அன்றி மக்களுக்கு இன்றியமையாத வேறு எந்த பண்டங்களின் உருவத்திலாயினும், இருக்கலாம். எனவே திரண்ட பணத்தை யுடைய ஒருவனைச் செல்வவான் என்று கூறுவதைப் போலவே அதிக நிலபுலங்களும், ஏராளமான ஆடு மாடுகளும், வேண்டிய உணவுப் பொருள்களும் படைத்த ஒருவனைச் செல்வவான் என்று அழைப்பதற்குத் தடையென்ன? உலகின் மக்களிடையில முதன் முதலாக நாகரீகம் தோன்றிய காலத்தில் எவரிடத்தில் ஆடு மாடுகளும், உணவுப் பொருள்களும் அதிகமாக விருந்தனவோ அவனே செல்வவந்தனாகக் கருதப்பட்டான். நம் பாரதக்கண்டத்தில் மிகப் பழமையான வேத



காலத்திய இலக்கியங்களைக் கவனிக்குமிடத்து அக்காலத்திய மக்கள் கன்று காலிகளையும், உணவுப் பண்டங்களையுமே செல்வமாகக் கருதி வந்திருப்பது புலனாகும்.

## பண்ட மாற்றுதல்

விவசாயம் முதலிய தொழில்கள் வளர்ந்து, நாளடைவில் ஒருவர்க்கொருவர் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் முறை தோன்றிய பொழுதும் நேர் முறையில் பலவகைப் பொருள்களும் செல்வமாகவே கருதப்பட்டு வந்தன. ஒருவன் தன்னிடத்திலுள்ள தானியத்தை அதை விரும்பி நிற்கும் நெசவு தொழிலாளனுக்குக் கொடுத்து, அதற்குப் பதிலாக அவனிடத்திலுள்ள துணியைத் தான் வாங்கிக் கொள்ளுவான். அப்படியே ஒருவர்க்கொருவர் தம்மிடத்திலுள்ள பண்டங்களை விரும்பியவராகவும், தமக்கு வேண்டிய பண்டங்களை வைத்திருப்பவராகவும் உள்ளவர்களிடம் பண்ட மாற்றுதல் செய்து கொண்டு, அவரவர் விரும்பிய பண்டங்களைப் பெற்று வந்தனர். எனவே அம்முறையில் காலதாமதமும், பின்னும் பல அசௌகரியங்களும் காணப்பட்டன. எப்படியெனில், தானியம் வைத்துக்கொண்டுள்ள ஒருவனுக்கு மாடு வேண்டியிருக்கிறது. ஆனால் மாடு வைத்துள்ள ஒருவனுக்குத் துணி வேண்டியிருக்கிறது. இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் பண்டங்களை மாற்றிக்கொள்ள விரும்புவார்களா? இவர்களிடையில் பண்ட மாற்றுதல் நடைபெறவேண்டும்; அதிலும் அவரவர் விரும்பிய பண்டங்கள் அவரவருக்குக் கிடைக்க வேண்டும். எனவே, இவ்விருவருங் கூடி துணி வைத்துக் கொண்டு தானியத்தை பண்ட மாற்றுதல் செய்து கொள்ள விரும்பும் மற்றொரு மனிதனைத் தேடவேண்டியிருக்கிறது. அப்படி, துணி நெய்து அதைத் தானியத்திற்கு விற்க விரும்புகிறவன் கிடைத்தவுடன், அம்மூவருங் கூடி சமரசத்துடன் துணிக்குடையவன் துணியைத் தானியக்காரனுக்குக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றுக் கொள்ளவும், தானியக்காரன் அத்துணியை வாங்கி மாட்டுக் காரனுக்கு அதைக்

கொடுத்துவிட்டு மாட்டைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும். இவ்வகையில் அம்மூவரும் பண்ட மாற்றுதல் வியாபாரம் செய்து முடித்துக்கொள்ள வேண்டும். மேலும் பண்டங்களின் மதிப்புகளுக் கேற்ப பண்டங்களின் அளவுகளும் தீர்மானிக்கப் படவேண்டும். இப்படியே இன்னும் சிந்தித்துப் பார்த்தால் ஒருவர்க்கொருவர் மாறுபட்ட பண்டங்களை விரும்பும் நான்குபேர் ஒன்று கூடியபோதிலும் தங்களிடத்தில் மிஞ்சும் ஒரு பொருளைப் பெற்றுக்கொண்டு தங்களிடத்திலில்லாத ஒரு பொருளைக் கொடுக்கக் கூடிய வேறொரு மனிதன் கிடைக்கும் வரையில் அந்நால்வருடைய பண்ட மாற்றுதல்கள் நடைபெறுவதற்கில்லை யென்பது விளங்கும். இம்முறையில் பண்ட மாற்றுதல் வியாபாரம் நடைபெறுவதில் எத்துணைக் கஷ்டங்களும், கால தாமதமும் உண்டாகக் கூடு மென்பதை யூகித்துப் பார்க்கவேண்டும்.

இவ்வித கஷ்டங்களுக்குப் பரிகாரமாக எல்லா மக்களும் பொதுவாக விரும்பக்கூடிய ஒரு பண்டம் இருப்பின், ஒவ்வொருவரும் தத்தம் இடத்திலுள்ள பல்வேறு பண்டங்களையும் கொடுத்து அப்பொதுவான விலை மதிப்புள்ள பண்டத்தை வாங்கி வைத்துக் கொண்டு, வேண்டிய போது அப் பண்டத்தைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய பிற பண்டங்களை அவ்வப்போது சுலபத்தில் வாங்கிக் கொள்ளலாம். அதனால் பண்ட மாற்றுதல் வியாபாரம் தாமதமில்லாமலும், சௌகரியமாகவும் நடைபெறக் கூடும். இந்த அனுகூலத்தைக் கருதிய மக்கள் தங்களுக்குள் பொதுவாக—யாவருக்கும் தேவையான—பண்டமாகிய தானியத்தையே முதன்முதலில் பண்ட மாற்றுதலுக்கு விலைமதிப்புள்ள வஸ்துவாக வாங்கி வந்திருக்கின்றனர். அந்தத் தானியமே அக்காலத்தில் மக்களால் நாணயமாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்தப் புராதன வழக்கமே நந்தமிழ் நாட்டில் பல கிராமங்களில் இன்னும் இருந்து வருகிறது. கிராம ஜனங்கள் தம்மிடத்துள்ள தானியத்தைக் கொடுத்து ஒவ்வொரு பண்டத்தையும் வாங்கி வருவதை இப்பொழுதும் காணலாம்.



## நாணயச் செலாவணி

நாகரீகம் முதிர்ச்சி யடைந்து வந்ததின் பயனாய் நாளடைவில் தானியத்தைவிட விலை பேறப் பெற்ற உலோகங்களை நாணயமாக வழங்கும் வழக்கம் தோன்றலாகியது. அதன் பின்னரே உலோகங்களை அழகான ஒருவித உருவத்தோடும், அளவோடும் செய்து பண்ட மாற்றுதலுக்குச் சாதகமான நாணயமாக வழங்கலாயினர். தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் பலவித மதிப்புள்ள நாணயங்கள் உலகில் செய்யப்பட்டன. அந்த நாணயச் செலாவணி வழக்கத்திற்கு வந்த பின்னரே பண்ட மாற்றுதல் முறையும், வர்த்தகமும் மேலோங்கி வளர்ந்து வரலாயின. வரவரக் காகித நாணயங்கள், பாங்கிகள், செக்குகள் (உண்டியல்கள்) முதலிய பல்வேறு சாதனங்களும் முறைகளும் தேசத்தில் ஏற்பட்டன. அவற்றால் வர்த்தகம் எவ்வளவோ தூரம் அதிசயிக்கத் தக்க வகையில முன்னேறி யிருக்கிறது. ஆயினும், அவ்வர்த்தக வளர்ச்சிக்குப் பண்ட உற்பத்தியே மூலாதார மென்பதை மறத்தலாகாது. மனிதரது தேவைகளுக் கேற்ப பல்வேறு வகை இயற்கை—செயற்கைப் பண்டங்கள் உலகில் ஏராளமாகத் தயாரிக்கப் படாவிட்டால் வர்த்தகம் தோன்றவோ, அன்றி மக்கள் உயிர்வாழவோ முடியுமா யென்பதை யோசியுங்கள்.

## பொருளுற்பத்தியின் நோக்கம்

விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு முறைகளிலும் தயாரிக்கப்படும் இயற்கை, செயற்கை ஆகிய இருவகைப் பண்டங்களனைத்தும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனங்களாம். விவசாயத்திலும், கைத்தொழிலிலும் உலகில் பலவித பொருள்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. எனவே அவ்வித பொருள்களை இக்காலத்தில் எவ்வித நோக்கத்தோடு எவ்வாறு செய்து வருகிறார்களென்பதை ஆராய்வோம். முற்காலத்தில் எவராயினும் ஒரு பொருளை உற்பத்தி செய்தாராயின் அப்பொருளை தமக்கு அல்லது தம் குடும்பத்திற்கு மாத்திரமே

உபயோகப்படுத்தி வந்தனர். சுய நலத்தை முன்னிட்டு நேரில் தாமே அனுபவிக்கக் கருதியே ஒவ்வொருவரும் பொருள் செய்வகையைக் கண்டு வந்தனர். இப்பொழுதும் நம்மிந்திய நாட்டில் கிராமங்களில் சிலர் தமது குடும்ப சௌக்கியத்திற்கு வேண்டிய பொருள்களனைத்தையும் தாமே செய்துகொண்டு வருகின்றனர். இந்த நவீன நாகரீக காலத்தில் அம்முறை மிகவும் குறைந்து வருகிறது. இக்காலத்தில் பலவித பொருள்களைச் செய்பவரனைவரும் தத்தம் பொருள்களைக் கடைகளில் விற்று, பல்வேறு பொருள்களை விரும்புபவருக்கெல்லாம் எட்டச் செய்வதற்கே உழைத்து வருகின்றனர். பண்ட மாற்றுதலுக்கு உயர்ந்த சாதகமான நாணயங்களை (Coins) இதுகாலை மக்கள் உபயோகித்து வருகிறார்களாகலால் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய பொருள்களனைத்தையும் தாமே செய்துகொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்கிடமில்லை. நெய்யுந் தொழிலையே முக்கியத் தொழிலாகக் கொண்டவரனைவரும் தாங்கள் நெய்யுந் துணிகள் அனைத்தையும் தாமே உடுத்திக் கொள்ளுவதில்லை. முக்கியமாகத் தாங்கள் தயாரிக்குந் துணிகளனைத்தும் கடைகளில் தக்க லாபத்திற்கு விற்பனை செய்வதற்கேயாம். அவ்வித விற்பனையால் கிடைத்த பணத்தைக் கொண்டு வேண்டிய இதர வஸ்துக்களைச் சம்பாதித்துக் கொள்ளுகின்றனர். ஆதலால் அதிகமாகப் பொருள் செய்வகையே பொருளாதாரத்திற்கு இன்றியமையாத இலக்கணமாகும். இக்காலத்தில் விரிவான மூலதனம் இன்றேல் பொருள் செய்வகையைப் பெருக்குவதற்கில்லை. கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கு எவ்வளவோ கைமுதல் வேண்டும். மூலப் பொருள்களை ஏராளமாக வாங்குவதற்கும், விலை யேறப்பெற்ற இயந்திர சாதனங்களை வாங்கித் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து நடத்துவதற்கும் கைமுதல் அதிகம் தேவை.

## தொழிற் பிரிவு

இக்காலத்தில் பொருள் செய்வகைக்கு மூலதனமே முக்கிய சாதனமாயிருப்பதால் பொருளாதார சாஸ்திரத்தின்படி மூலதனம்



வைத்துத் தொழில்களை நடத்த முதலாளிகளென்னும் ஒரு பிரிவும், அத்தொழிற்சாலைகளில் கூலிக்குழைத்துத் தொழிலை நடத்தும் தொழிலாளர்களென்னும் மற்றொரு பிரிவும் தோன்றியுள்ளன. முற்காலத்தைப்போல் ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தானே செய்துகொள்ள முடியாமல் இக்காலத்தில் தன் சக்திக்கும், தன் விருப்பத்திற்கும் உரிய ஒரு தொழிலிலேயே அதிக வேலை செய்து, அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு, பிற சௌகரியங்களையும் அடைகிறான். இம்முறையில் அவரவர் தத்தமக்கியன்ற விருப்பமான ஒரு தொழிலைப் புரிவதால் அத்தொழிலில் தேர்ச்சியும், வன்மையும் ஏற்படுவதோடு, அத்தொழிலில் புதிய மாதிரிகளையும் கண்டு பிடிக்கிறார்கள். எனவே அவர்களால் தயாரிக்கப்படும் பொருள்கள் மிகச் சிறந்தனவா யிருக்கின்றன. மேலும் ஒவ்வொருவரும் அவரவருக்கு விருப்பமான ஒரு துறையில் அரிய ஆராய்ச்சிகள் செய்யவும் அனுகூலமுண்டாகிறது. அதனாலேயே உலகில் பற்பல இயந்திர நிர்மாணங்களும் தோன்றின. எனினும் ஒரு பெரிய தொழிலை நடத்த முற்பட்டால் அதற்குச் சம்பந்தப்பட்ட பற்பல சிறிய தொழில்களையும் தாமே நடத்தவேண்டி வரும். அப்படிச் செய்தாலேயே முதன்மையான பெரிய தொழிலுக்கு லாபம் கைக்கூடி வருவதாம். இன்றேல் சிறிது நஷ்டமும் ஏற்படலாம். ஆயினும் இம்முறையில் பல தொழில்களை ஒரு சிலர் மேற்பார்வையிடுவதாயிருக்குமேயன்றி, பல தொழில்களையும் நேரில் ஒரு சிலரே செய்யவேண்டியிராது. ஆதலால் ஒவ்வொரு தொழிலாளரும் தத்தமக்கு விருப்பமான ஒவ்வொரு தொழிலையே செய்து வரும் முறைக்கு முரண் ஏற்படுவதில்லை.

## பல தொழில்களுக் கொரு தலைமை.

அமெரிக்காவிலுள்ள ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி யென்று வழங்கும் [illegible] எண்ணெய் வியாபாரத் தொழிற்சாலையைப் பற்றி யாவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அக்கம்பெனியானது எண்

ணைய்க் கிணறுகளினின்றும் எண்ணெய்யை எடுத்துச் சுத்தப்படுத்தி விற்பதான ஒரு முக்கியத் தொழிலையே செய்து வருகிறதாயினும், அத்தொழிலைக் கூடுதலாகவும், நேர்மையாகவும், நாணயமாகவும் செய்யவேண்டி வேறு பல உபத்தொழில்களையும் தானே நடத்திவருகிறது. எவ்விதமெனில், கிணறுகளில், எடுக்கும் எண்ணெய்யை ஊற்றிவைக்கத் தக்க தகர டப்பாக்களையும், அந்த டப்பாக்களை யமைப்பதற்கேற்ற தேவதாரு மரத்தாலான பெட்டிகளையும், ஆயிரக்கணக்கான காலன் எண்ணெய்யைத் தேக்கி வைப்பதற்கேற்ற ரிஸர்வாயர்களையும், அந்த எண்ணெய் டின்களைத் தொழிற்சாலையினின்றும் வெளியிடங்களுக்குக் கொண்டுசேர்ப்பதற்கு இரயில்வே, கப்பல் முதலிய போக்கு வரவு சாதனங்களையும் அக்கம்பெனியே செய்து கொள்ளுகிறதென்றால், எத்தனைவிதத் தொழிலாளர்களும், எத்தனை விதத் தொழிற்சாலைகளும் அக்கம்பெனியின்கீழ் வேலைசெய்து வரக்கூடுமென்பதை யூகித்துப் பாருங்கள்.

ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ள வெவ்வேறு தொழில்களனைத்திற்கும் ஒருவரே வியாபாரத் தலைவராகவும், ஒரே காரிய நிர்வாகமாகவும் இருந்தால் எவ்வளவோ அனுகூலங்களுண்டு. ஆதலாலேயே இக்காலத்திய பொருளாதார வளர்ச்சிக்கேற்ப பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஒருவரின் தலைமையின்கீழ் நடைபெறுவனவாய் அமெரிக்கா, ஜர்மனி முதலிய நாடுகளில் காணப்படுகின்றன. போர்டு மோட்டார் தொழிற்சாலை முதலியன இதற்கு உதாரணங்களாம். அமெரிக்காவிலுள்ள சர்க்கரையைச் சுத்தம் செய்யும் தொழிற்சாலையின் நிர்வாகத்தைச் சற்று கவனித்தால் இம்முறையின் நோக்கங்கள் இனிது விளங்கலாம். சர்க்கரையைச் சுத்தஞ்செய்யுந் தொழிற்சாலையென்றால் சாதாரணமான ஒரு சிறு தொழிற்சாலை யன்று. லக்ஷக்கணக்கான விலை பேறப்பெற்ற பத்துமுதல் பதினைந்து ஆயிரக்கணக்கான பஸ்தாக்களைக் கொண்ட சர்க்கரை நாள்தோறும் அத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றது. அவ்வளவு பெரிய தொழிற்சாலையானது பல்வேறு வித உபத்தொழில்களை யுள்ளடக்கிக்கொண்டிருக்கிறது.



தனக்கு வேண்டிய மூலப்பொருள்களை விளைவித்துக் கொள்ளவும், அவற்றால் வேண்டிய செயற்கைப் பொருள்களைத் தயாரிக்கவும், அவற்றைக்கொண்டு பிரதான தொழிற்சாலையின் வேலையை நேர்மையாகவும், லாபகரமாகவும் நடத்தவும், தயாரிக்கும் சர்க்கரையைப் பாக் செய்தனுப்புவதற் கேற்றவைகளையோ, டின்களையோ செய்துகொள்ளவும் ஆகிய பல தொழில்களையும் அத்தொழிற்சாலையே தன் தலைமையின் கீழ் செய்து வருகிறது. அதைப் போலவே "யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பரேஷன்" என்ற ஸ்தாபனமும் அமெரிக்காவில் வெகு அற்புதமாக வேலை செய்து வருகிறது. இவ்வுதாரணங்களால் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட பலவகைத் தொழில்களையும் ஒரு ஸ்தாபனத்தின் தலைமையின்கீழ் நடத்துவதால் செலவுகள் குறைவதோடு, பொருளாதார நிலை மேலோங்குவதற்குச் சாதகமாகிற தென்பதை யுணரலாம்.

## முற்கால தற்கால வேற்றுமை.

முன் காலத்தில் கைத்தொழிலாளர் தனித்தனியே பொருள்களைத் தயாரித்து அவற்றை விரும்பியவருக்கு நேரில் போதிய விலைக்கு விற்று ஊதியமடைந்து வந்தனர். ஆயினும் இடைக்காலத்தில் தொழிலாளரின் போட்டியால் அம்முறையில் பொருள் செய்வகை நஷ்டமடையலாயிற்று. எனினும் அதுகாலை தொழிலாளர் சங்கங்கள் தோன்றி அந்நிலையைச் சீர்படுத்தவும், தம்முள் கட்டுப்பாடாகப் பொருள்களுக்கு விலை யேற்படுத்தவும் முயன்று பயன் பெற்று வந்தன. ஆயினும் நாளடைவில் கைத்தொழிலாளர்கள் தங்கள் சுதந்தரத்தை யிழந்து பெரிய வர்த்தகத்தினிடத்திலோ அல்லது பெரிய பொருளாளியிடத்திலோ சேவகத்திலமர்ந்து எஜமானன் கொடுத்த மூலப்பொருளைக் கொண்டு பல்வேறு வித செயற்கைப்பொருள்களாக அவற்றைச் செய்துகொடுக்க முற்பட்டனர். அமிதமான மூலதனம் இன்றேல் இக்காலத்தில் பெரிய தொழில்களையும், பெரிய வர்த்தகத்தையும் நடத்துவ தென்பது

முடியாத காரியம். சிறு கைமுதலைக் கொண்டு சிறு சிறு கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்துபவர்கள், இந்த இயந்திர யுகத்தில் தங்கள் தொழிலை நஷ்டமின்றி நடத்திவருவது மிகவும் கடினமாகும். ஆகவே, கைத்தொழிலில் தேர்ச்சியுற்ற தொழிலாளர் பலரும் இக்காலத்தில் பிழைக்கவழியின்றிப் பணக்காரர்களையடுத்து ஜீவித்து வருகின்றனர். எனவே தங்கள் தொழில் திறமையையும், தங்கள் கஷ்டமும் தங்களுக்கன்றி தங்கள் எஜமானர்களின் லாபத்திற்கே பயன்படுவனவாகின்றன. மேலே கூறிய விவரங்களால் விஸ்தாரமாகக் கைமுதல வைத்து விரிவாக வேலை செய்யும் தொழிலுக்கே இக்காலத்தில் நன்மையுண்டென்பது விளங்குவதால், அவ்விதம் விஸ்தாரமாகப் பொருள்செய் வகையில் வேலை செய்வதற்கு உலகில் மக்கள் எவ்வெவ்விதமான முறைகளைக் கைக்கொண்டுள்ளாரென்பதைச் சிறிதாராய்வோம்.

## பொருள் செய்வகைகள்.

### 1. தனி வியாபார முறை.

ஒரே மனிதன் தனது கைப்பொருளைக் கொண்டோ, கடன் வாங்கியோ மூலதனம் வைத்துப் பெரிய தொழிலை ஸ்தாபித்துப் பெரிய தொழிலாளர்களை வேலைக் கமர்த்திக்கொண்டு, எல்லா வேலைகளையும் தானே மேற்பார்வையிட்டுத் தொழிலை நடத்தி வருகிறான். அதில் வரும் லாப நஷ்டங்களனைத்தும் அவனுடையதேயாகும். இதிலுள்ள அனுகூலம் யாதெனில் காரிய நிர்வாகத்தில் ஒரேவித நியமனங்கள் செய்யலாம். பலபேர் தலைவர்களாயிருப்பதில் ஏற்படும் அபிப்பிராய பேதங்கள் முதலிய கஷ்ட நஷ்டங்களுக்கு இதில் இடமில்லை. ஆனால் இம்முறையில் நஷ்டங்களில்லையென்பதற்கில்லை. இக்காலத்தில் பொருளாதார ஸ்தாபனங்கள் அனைத்தும் விஸ்தாரமாக வேலை செய்யவேண்டுவ தவசியமாதல் பற்றிப் பல கிளை ஸ்தாபனங்களோடு கூடிய பெருந் தொழிலை எவ்வளவு புத்தியும், சாமர்த்தியமு முடைய மனிதனாயினும் ஒருவனே திறமையுடன் மேற்பார்வையிட்டு நடத்தி வருவது இயலாத காரியமாம். மேலும் பலபேர் முதலாளிகள் சேகரிக்கக்கூடிய அவ்வளவு மூலதனத்தை ஒருவன் சம்பாதிப்பதும் முடியாதன்றோ?



### 2. கூட்டுப் பங்கு வியாபார முறை.

இதுவே ஆங்கிலத்தில் பார்ட்னர்ஷிப் எனப்படுவதாம். ஒருவன் தலைமையில் நடைபெறும் ஸ்தாபனத்தில் நேருங் குறைபாடுகளை நீக்குவதற்காகவே இம்முறை காணப்பட்டது. பலபேர் பொருளாளிகளும், அறிவாளிகளும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தைப் பங்குகளாகப் போட்டுச் சேர்த்து எல்லாக் காரியங்களையும் நேர்மையாக நிர்வகிப்பார்கள். முதலில் கூறிய ஒருவனுடைய சொந்த ஸ்தாபனத்தைவிட இந்த ஸ்தாபனத்தால் பல நன்மைகள் உண்டு. எனினும், கூட்டாளிகளில் ஒருவரிடத்து மற்றொருவருக்கு நம்பிக்கை யேற்படாமற் போனால், இந்த ஸ்தாபனம் நடைபெறுவது கஷ்டம். ஏதேனும் பெருத்த நஷ்டமுண்டானால் கூட்டாளிகள் தொழிலுக்கென பிரத்தியேகமாகப்போட்டுவைத்த கைப்பொருளேயன்றி, அவரவர்களுடைய சொந்த சொத்துக்களாயுள்ள பிறவும் ஜவாப்தாரியாகவேண்டிவரும். உற்சாகமும், ஊக்கமுமுள்ள கூட்டாளிகள் சிலர் தொழிலில் குறித்தச் சில புது முறைகளைக் கையாட வேண்டுமென்று விரும்பிய பொழுது மற்றக் கூட்டாளிகளுக்கும் அக்கருத்துச் சம்மதமாயிருக்க வேண்டும். அப்படியின்றேல் இக்கூட்டுப் பங்காளி முறை வியாபாரமானது நடைபெற முடியாது. எனினும் இன்று உலகில் இதுபோன்ற ஸ்தாபனங்களால் பற்பல பெரிய தொழில்கள் நடைபெற்று வருகின்றனவென்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். ஆயினும், கீழே கூறப்போகும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளைப் போல் இக்கூட்டுப்பங்கு முறை இதுகாலை பொருளாதார உலகில் பிரபலமடையவில்லை.



159628

### 3. ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனி முறை.

தற்காலத்தில் பொருளாதார உலகில் இந்த ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனி முறையைக் கொண்ட ஸ்தாபனங்களாலேயே பெரிய வியாபாரங்களும் பெரிய இயந்திர சாதனங்களோடு கூடிய தொழில்களும் நடைபெற்று வருவதால், இக்காலத்திய பொருள் செயல் வகைக்கு இம்முறையே ஏற்ற சாதனமாகப் பாராட்டப்படுகிறது. உலகில் ஆங்காங்கே ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் அநேகமாகத் தோன்றிவருவதற்குக் காரணம் இக் கம்பெனியின் மூலதனத்தை வரம்பு கட்டி யாண் செய்வதன் அனுஷ்டானத்தாலேயாம். ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளுக்கு நான்கு அங்கங்களுண்டு. 1. தொழில் நிபுணர் 2. பரிசோதகர்கள் (டைரக்டர்கள்,) 3. காரிய நிர்வாகிகள் (மானேஜர்கள்,) 4. பங்காளிகள் (ஷேர் ஹோல்டர்கள்) என்பனவாம். ஒவ்வொரு ஷேர் அல்லது பாகத்தின் விலை மிகவுங் கொஞ்சமே. சிறு சிறு தொகைகளுக்கு ஷேர்களை விற்பனை செய்து எவ்வளவு மூலதனம் வேண்டுமாயினும் சேர்க்கலாம். ஆதலால் ஷேர் காபிடல் எனவே ஷேர்களை விற்பதால் கிடைத்த தொகையை மூலதனமாகக்கொண்டு தொழில் புரியும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் இன்று பொருளாதார உலகில் முதன்மையடைந்து வருகின்றன. இந்த ஸ்தாபனத்திற்கு நஷ்டம் வருமாயின் ஒவ்வொரு ஷேர் ஹோல்டருக்கும் உண்டாகும் நஷ்டம் சிறு தொகையேயாம். ஆகையாலேயே ஷேர் ஹோல்டர்கள் அனைவரும் அந்த ஸ்தாபனத்தின் நிர்வாக நடை முறைகளில் அதிக கவனம் செலுத்தாமல் அதன் டைரக்டர்களின் பொறுப்பிலேயே எல்லாக் காரியங்களையும் விட்டு வைக்கின்றனர். அந்த டைரக்டர்கள் ஒவ்வொரு வருஷமும் ஷேர் ஹோல்டர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அவர்களும் காரிய தரிசிகளுங் கூடியே ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியின் வியவகாரங்கள் அனைத்தையும் நிர்வகித்து வருவார்கள். இன்று உலகில் கப்பல்களையும் இரயில்வேக்களையும் நடத்தல், தொழிற்சாலைகளை ஸ்தாபித்துத் துணி நெய்தல் முதலிய பலவித கைத் தொழில்களை



நடத்தல், காப்பி, தேயிலை முதலிய தோட்டங்களை வைத்துப் பயிர் செய்தல், பெரிய வியாபாரசாலைகளை நடத்தல் முதலிய பலவித தொழில்களும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளாலேயே செய்யப்பட்டு வருகின்றன. இக்கம்பெனி முறையின் மேன்மையும், வன்மையும் விளக்குவதற்கு உதாரணமாக 16-வது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வர்த்தகத்தை முன்னிட்டுவந்து 18-வது நூற்றாண்டினிடையில் நம்மிந்திய நாட்டைக் கைப்பற்றி நம்மை ஆளத் தலைப்பட்ட ஆங்கிலேயரின் "ஈஸ்டு இந்தியா கம்பெனி" யென்ற ஸ்தாபனமும் ஒரு ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியே யென்பதை இங்கு குறிப்பிடுகின்றோம்.

இக் கம்பெனி முறையிலும் பல நன்மைகளோடு சில தீமைகளுமுண்டு. ஒருவன் தலையில் நடைபெறும் ஸ்தாபனத்தைப் போல் இந்த ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியானது காரிய நிர்வாகியாகிய ஒருவனுடைய ஆயுட்காலத்தோடு முடிவடைவதன்று; காரிய நிர்வாகிகள் இறந்துவிடலாம்; அவர்களுக்குப் பதிலாக புதிய காரிய நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள். டைரக்டர்கள் மாறிவரலாம். ஆயினும் அக்கம்பெனியின் தொழில் நில்லாமல் நடைபெற்றேவரும். அறிவும் அனுபவமும் படைத்த வல்லமைசாலிகள் டைரக்டர்களாகவிருந்து காரியங்களை ஒழுங்காக நடத்துவார்கள். சாதாரணமாக எந்த நாட்டிலும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளின் வரவு செலவு கணக்குகளை அந்நாட்டுத் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள கணித நிபுணர்கள் ஒவ்வொரு வருடமும் பார்வையிட்டுத் தணிக்கை (ஆடிட்) செய்து வருவதால், கம்பெனியின் டைரக்டர்கள் வெளியிடும் விளம்பரங்களை அல்லது அறிக்கைகளை உண்மையானவையா அல்லவா என்பதை பொது ஜனங்கள் அவ்வப்போது தெரிந்துகொள்ளக் கூடும். இவ்வளவு அனுகூலங்களிருப்பினும் இம்முறையிலும் சில குறைகள் காணப்படுகின்றன.

காரிய நிர்வாகத்தின் பொறுப்பனைத்தும் ஷேர் ஹோல்டர்கள், டைரெக்டர்கள், காரியதரிசிகள் ஆகிய மூன்று பிரிவாரின் மீது சார்கிறபடியால், ஒருவர் தலைமையில் நடைபெறுவது போல் ஒருவர் பொறுப்பில் அக்கரையுடன் நடைபெறாமற் போகலாம். அம்மூன்று பிரிவாருள் ஷேர் ஹோல்டர்கள் என்போர் பங்கெடுத்துக்கொண்டு பணத்தைக் கொடுப்பதேயன்றி வேறு முக்கியமான நிர்வாகக் காரியங்களைக் கவனிப்பதில்லை. உண்மையில் கம்பெனியின் வளர்ச்சிக்குப் பாடுபடுபவர்கள் டைரெக்டர்களும், தொழிலாளருமேயாவர். அவர்களின் உழைப்பால் கம்பெனிக்கு லாபம் வந்ததானால் அதில் ஷேர் ஹோல்டர்கள் லாபப் பங்கு பெற்றுக் கொள்ளுவார்கள். ஷேர் ஹோல்டர்களில் ஒருவர்க்கொருவர் நேர்முகத்தில் அறிமுகமில்லாதவர்களா யிருப்பார்கள். காரிய நிர்வாகிகள் பெரும்பாலும் அன்னியரது கைமுதலைக் கொண்டு வேலை செய்பவராதலால், அக்கரையுடன் வேலை செய்யாமல் வியாபாரத்தைக்கெடுத்துக்கூடிய விரைவில் கம்பெனியை நஷ்டத்தில் ஆழ்த்திவிடுவது முண்டு. இவ்வித கஷ்டங்களிருந்தாலும் பெருந்தொகையான மூலதனத்தைச் சுலபமாகத் திரட்டச் சாதகமாயிருப்பது இக்கம்பெனி முறையேயாம். சாமானியமான எளிய மக்களும் தொழில் வளர்ச்சியில் ஆர்வங்கொண்டு பண உதவி செய்வதற்குச் சாதகமானது இம்முறையே. கூட்டுப்பங்கு வியாபார முறையைப் போலன்றி, நஷ்டமுண்டானாலும் "ஷேர் காபிடல்" என்ற மொத்தப் பங்குத் தொகைக்கு அஃது சாருமேயன்றி, ஷேர்களை வாங்கியுள்ளவர்களது இதர சொத்துக்களை அஃது பாதிப்பதில்லை. மேலும் ஷேர் ஹோல்டர் ஒருவர் தமது ஷேர்களை பங்குகளை வேண்டிய போது பிறருக்கு விற்றுவிட்டுப் பணம் பெற்றுக்கொள்ளலாம். கைப்பொருள் ஒன்றும் இல்லாதவர்களாயினும் வியாபாரத் தந்திரமும், தொழிலில் திறமையும், அனுபவமும் வாய்ந்த அறிவாளிகள் இந்த ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனி முறையை யனுசரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பல வகைகளில் துணை புரியலாம்.



இதுபோன்ற பல நன்மைகளைக் கருதியே ஒவ்வொரு தேசத்திலும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் தோன்றி வர்த்தகம், கைத்தொழில், விவசாயம் முதலிய துறைகளில் உழைத்து வருகின்றன. அமெரிக்கா, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஏராளமான ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் ஏற்பட்டு இரயில்வே, சுரங்க வேலை, பாங்கி, வியாபாரசாலை, மில், பாக்டரி, காப்பி, தேயிலைத் தோட்டம். முதலிய பல ஸ்தாபனங்களின் மூலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேலை செய்து வருகின்றன. இந்தியாவிலும் இதுபோன்ற ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் 1914, 15 வருடத்தில் 2545 வரை ஏற்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

### 4. கூட்டுறவுச் சங்க முறை.

இவையே கோவாப்ரேடிவ் சொஸைடிகள் எனப்படும். விரிவான வியாபாரத்திற்கும், தனவந்தர்களுக்கும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் எப்படி உபயோகமா யிருக்கின்றனவோ அப்படியே சில்லரை வியாபாரங்களுக்கும், ஏழைகளுக்கும் இக்கூட்டுறவுச் சங்கங்களின் முறை மிகவும் உபயோகமானவைகளா யிருக்கின்றன. பொருள் செய்வகை; பொருளின் பிரிவினை, பொருளை மாற்றுதல் முதலியவற்றில் போட்டியினால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை யகற்றுவதற்குக் கூட்டுறவு சங்கங்களே ஏற்ற சாதனங்களாம். இக்கால பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாய்க் காணப்படும் பாக்டரிகளை நடத்தும் காரிய நிர்வாகிகள், உத்தியோகங்களைக் கொடுக்கும் எஜமானர்கள், லாபத்தைக்கோரி வியாபாரம் செய்யும் மத்தியஸ்தர்களாகிய தரகர்கள் முதலியவர்களால் உண்டாகும் கொடுமைகளை யகற்றி, பொருளை உற்பத்தி செய்பவர்களுக்கும், அப்பொருளை உபயோகிப்பவர்களுக்கும் நேரில் லாபத்தைக் கொடுப்பதற்கே இக்கூட்டுறவு சங்க நிர்மாணங்கள் தோன்றியுள்ளன. பொருள்களை உபயோகிப்பவர்கள் சில்லரையாகக் கடைகளில் அவற்றை வாங்குவதால் அதிக விலை கொடுக்கவேண்டி யேற்படுமாதலால், கூட்டுறவுச் சங்கங்கள் பண்டங்களை,

மொத்தமாக மலிவான விலைக்கு வாங்கி அவற்றை உபயோகிப்பவர்களுக்கு உதவுகின்றன. முதலில் அப்பண்டங்களை வாங்குவதற்கேற்ற தொகையை மெம்பர்களிடையில் சந்தாக்களின் மூலமாக வசூலித்துச் சேர்ப்பார்கள். அத்தொகையின் அளவு மெம்பர்கள் சங்கத்தினிடம் வாங்கும் பண்டங்களின் அளவுக்கேற்ப அமையும். சங்கத்திற்கு வரும் லாபமானது முதலில் சங்கத்திற்குச் செலுத்தியுள்ள சந்தாக்களின் மொத்தத்திற்குத் தக்கபடி நிர்ணயிக்கப்படும். அச்சங்கத்தின் காரியங்களை நிர்வாகிப்பதற்கு டைரெக்டர்கள் சிலரைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்படும். அந்த டைரெக்டர்களைச் சங்கத்தின் சாமானிய மெம்பர்களே தேர்ந்தெடுப்பார்கள்.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயம், கைத்தொழில் முதலியவற்றையும் நடத்துகின்றன. அதனால் தொழிலாளருக்கு மாமூல்படிக்கான சம்பளம் கிடைப்பதோடு சங்கத்தின லாப நஷ்டங்களிலும் பங்கு பெறுகின்றனர். எனவே சங்கத்தின் லாபகரமான தொழில் வளர்ச்சியில் தொழிலாளர்களுக்கு அதிக ஊக்கமும், அபிமானமும் உண்டாகின்றன. ஆயினும் பொருள்களை விற்கும் சங்கங்களைப்போல் பொருள்களை உற்பத்தி செய்யும் சங்கங்கள் நாட்டில் வளர்ச்சியடைவதாகத் தெரியவில்லை. ஏனெனில், இதற்கு விரிவான மூலதனத்தைச் சேகரிப்பது மிகவுங் கஷ்டமாயிருப்பதேயாம். மேலும் பொருளாதார வளர்ச்சிக்குரிய விரிவான திட்டங்களையும், சூழ்ச்சிகளையும் கைப்பற்றி வேலை செய்யவேண்டிய அறிவாற்றல்கள் இச்சங்கங்களுக்குப் பெரும்பாலும் ஏற்படுவதில்லை. நம்மிந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் குறைந்த வட்டிக்குப் பணத்தைக் கடன் வாங்கவும், கொடுக்கவுமான பாங்கிகளாக மாத்திரமே வேலை செய்து வருகின்றன. விவசாயிகளாகிய ஏழைக் குடிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கச் செய்வதற்காகவே இந்திய துரைத்தனத்தார் 1904-ம் ஆண்டில் கோவாப்பரேடிவ் கிரெடிட் சொசைடிகளைப் பற்றிய சட்டத்தை நிருமித்தனர். அச்சட்டத்தின் முதன்மையான



நோக்கம் விவசாயிகளுக்குள்ளும், சிறு வருவாயுள்ள பொது ஜனங்களுக்குள்ளும் செட்டான செலவு, சுய முயற்சியால் உதவி, கூட்டுறவு (ஒற்றுமை) முதலிய நற்குணங்களை யுண்டாக்கி, அவ்வழியில் அவர்களுடைய பொருளாதார நிலைமையை மேன்மைப்படுத்த வேண்டுமென்பதேயாம். இக்கூட்டுறவுச் சங்க நடைமுறைகளில் அனுபவமும், அறிவும் பொது மக்களிடையில் வளர்ந்து வருமாயின் இம்முறையில் எல்லாவிதத் தொழில்களையும் புரிவதற்கேற்ற எண்ணமும், சாதனங்களும் நாட்டில் ஏற்படலாம்.

## 5. துரைத்தனத்தாரே தொழில் செய்தல்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துரைத்தனத்தாரே நேரில் தலையிட்டு வேலை செய்வது ஒரு முறையாகும். அநேகமாக எல்லாத் தேசங்களிலும் பொருளாதார வளர்ச்சிக்குத் துரைத்தனத்தாரே பலவிதத் தொழில்களை ஸ்தாபித்து நடத்த வேண்டுவதவசியமென்ற கருத்து இதுகாலை பரவிவருகிறது. ஆனால் சில காலங்களுக்கு முன்வரையில் துரைத்தனத்தார் நாட்டின் அமைதியைக் காத்து நீதி செலுத்தும் அதிகாரத்தைத் தவிர பொது ஜன வாழ்க்கையில் தலையிட்டுக் கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றை நடத்துதல் கூடாதென்ற எண்ணம் பரவியிருந்தது. ஆயினும் இப்பொழுது அவ்வெண்ணம் மாறிவிட்டது. இன்று எத்தேசத்தைப் பார்த்தாலும், அத்தேசத்தின் துரைத்தனத்தார் பொருளாதார வளர்ச்சியை விரும்பித் தம் நாட்டில் சிறுபான்மையோ பெரும்பான்மையோ பல தொழில்களைத் தாமே நேரில் செய்து வருவதைக் காணலாம்.

இக்காலத்தில் துரைத்தனத்தார் பொருளாதார விஷயத்தில் தலையிடுவதற்குச் சில முக்கிய காரணங்களுண்டு. வரிகளின் மூலமாகக் குடிகளிடமிருந்து வசூலிக்கும் பணத்தைக் கொண்டே இராஜாங்க செலவுகளனைத்தையும் செய்து முடிப்பது இயலாத காரியம். ஏனெனில் இராஜாங்கத்தின் செலவுகள் பல காரணங்களாலும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகின்றன.

அதற்கேற்ப வரிகள் உயர்வடைவதில்லை. எனவே துரைத்தனத்தாரும் சிற்சில வியாபாரத் தொழில்களைச் செய்து அதனால் ஊதியம் பெற்று அதைக் கொண்டு இராஜாங்கச் செலவுகளை ஈடு செய்து கொள்ளுவது நல்லதல்லவா? மேலும் உலகப் போட்டியில் ஈடு காட்ட முடியாத சில தொழில்களைத் துரைத்தனத்தாரால்தான் செய்யமுடியும். அல்லாமலும் பொருளாதார விஷயங்களில் துரைத்தனத்தார் தலையிடாமல் நடு நிலைமையிலிருந்தால், பொது ஜனங்கள் தங்களிஷ்டப்படி சுய நலத்துடன் நடக்கத் தலைப்படுவார்களாதலால் தேசத்தின் பொது நலத்திற்குக் கெடுதி நேரிடலாம். ஆகையால் நாட்டில் தொழிற் பாட்சாலைகளை ஏற்படுத்தல், கைத் தொழில்களையும், இயந்திரத் தொழில்களையும் வளர்த்தல், மாதிரித் தொழிற்சாலைகளை ஸ்தாபித்தல், அயல் நாட்டாரின் போட்டியினின்றும் தம் நாட்டாரின் பொருளாதார நிலைக்குக் கெடுதி நேராமல் தகுந்த காப்புகளை ஏற்படுத்தல் முதலிய வேலைகள் துரைத்தனத்தார் செய்யவேண்டுவனவேயாகும். தந்தி, தபால், இருப்புப் பாதை, கால்வாய், காடு, சுரங்கம், நாணயச்சாலை முதலிய விஷயங்களில் ஜனங்கள் தம் இஷ்டப்படி நடக்கத் தலைப்படுவார்களாயின் தேசத்திற்கு நஷ்டமேற்படக் கூடுமாதலால், ஒவ்வொரு தேசத் துரைத்தனத்தாரும் மேற்கண்ட விஷயங்களைத் தாமே நிர்வகித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றனர். இங்கிலாந்து, ஜர்மனி, இடாலி, ஸ்விட்ஜர்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் முனிசிபாலிடிகளும் (நகர சபைகளும்) மாகாண கவர்ன்மெண்டுகளும் பொது ஜனங்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் பல வழிகளில் உதவி புரிந்து வருகிறார்களென்று தெரியவருகிறது.

நமது இந்திய துரைத்தனத்தாரும் கூடியவரையில் மேற்கூறிய தேசங்களைப் பின்பற்றி வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றனர். ஆயினும் அயல்நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் நந்துரைத்தனத்தார் செய்யும் வேலை மிகவுங் குறைவாகவே காணப்படுகிறது. ஆதலால் தேசாபிமானிகளும், பொது ஜனங்களும்



அயல் நாட்டுப் போட்டிகளிலிருந்து நந்நாட்டுக் கைத் தொழில்களையும், வர்த்தகங்களையும் காக்கத்தக்க முறைகளைக் கோலவும், நம் நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குரிய பல்வேறு தொழில்களை நாட்டில் நடத்தவும் வேலைசெய்யுமாறு இந்திய துரைத்தனத்தை மேன்மேலும் வற்புறுத்த முயலவேண்டும்.

## முடிவுரை.

இக்கட்டுரையில் பொருள் என்பது இன்னதென்பதும், பண்டமாற்றுதல் முறைகளுக்குச் சாதகமாக நாணயங்கள் ஏற்பட்ட வகையும், அதனால் வர்த்தகம் வளர்ச்சியுற்ற விபரமும், முதலில் கைத்தொழில் தோன்றிய நோக்கமும், பின்னர் தொழில் செய்வதின் கருத்து மாறிய விதமும், பொருள் செய் வகையில் ஏற்பட்ட பிரிவும், விஸ்தாரமாகத் தொழில் செய்ய வேண்டுவதன் அவசியமும், ஒருவர் தலைமையில் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமுடைய பல தொழில்களை நடத்துவதன் பெருமையும், தொழிலாளர் நிலையும், சில்லரைத் தொழில் ஸ்தாபனங்களுக்கு இக்காலத்தில் ஊதியமில்லையென்பதும், பெருத்த கைமுதல் வைத்து விரிவாகத் தொழில் செய்யும் முறையே இக்காலத்தில் பொருள் செய் வகைக்கு ஏற்றதென்பதும், அதற்கு இன்று உலகில் தோன்றியுள்ள முறைகளாகிய ஒருவன் தன் கைப் பொருளைக்கொண்டு தொழில் செய்தல், கூட்டுப்பங்காளிகள் சேர்ந்து தொழில் செய்தல், ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனி முறையில் தொழில் நடத்தல், ஐக்ய நாணயச் சங்க முறையில் தொழில் செய்தல், துரைத்தனத்தாரே நேரில் தொழில்களை ஸ்தாபித்து நடத்தல் ஆகிய வழிகளின் விபரங்களும், அவற்றின் நன்மை தீமைகளும், பிறவும் கூறப்பட்டன. இவற்றுள் இந்திய நன்மக்கள் நம் நாட்டின் பொருளாதார மேன்மைக்கேற்ற வழிகளைக் கைப்பற்றி உழைக்கவேண்டுவது இன்றியமையாததாம். சுபம்.

N. வெங்கட்டரமணன்.

# விவசாயக் கைத்தொழில்.

தென்னிந்தியாவில் வாழைப் பயிர் மிகுதியாகச் செய்தாலும் அவைகளால் கிடைக்கக்கூடிய இலாபங்களை நம்மவர்கள் அடையவேயில்லை. அமெரிக்கா தேசத்தவர்கள் மலையாள தேசத்திலுள்ள ஏத்தங்காய் என்ற ஒருவித வாழைக்காய்களை வாங்கிப்போய் அவைகளின் மாவைக் குழந்தைகளுக்குத் தக்க அவிழ்தங்கள் செய்து பதின்மடங்கான இலாபங்களை அடைந்து வருகிறார்கள். அம்மருந்துகளை நம்மவர்கள் செய்து அந்த இலாபங்களை ஏன் அடையக்கூடாது? ஒரு அணா கொடுத்து ஒரு வாழைமரத்தை வாங்கி அந்த மட்டைகளினின்றும் நார் எடுத்தால் அது இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் விற்கப்படலாம். எட்டணாவுக்கு விற்கப்படும் வாழைக்காயினின்றும் மாவெடுத்தால் அதை இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் விற்கலாம். இவ்விதம் நாரெடுப்பது, மாவெடுப்பது முதலியனவற்றை நம் தேசச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்தால் அவர்கள் அத்தொழில் செய்து தகுந்த ஜீவனஞ் செய்வார்கள்.

தென்னிந்தியாவில் தென்னை விருட்சங்கள் விசேஷமாக விருந்தும் அவைகளினால் கிடைக்கக்கூடிய வரும்படிகளை நம்மவர்கள் சரியாக அடையவே இல்லை. இந்தத் தேங்காயினின்றும் கொத்தமல்லி விதை போன்ற துறுவல்கள் யந்திரசக்தியால் செய்து அவைகளை ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களுக்கு அனுப்பினால் தேங்காய் விலைக்கு ஐந்து மடங்கு அதிகமான விலைக்கு விற்கலாம். தேங்காய் நெய்யினின்றும் கோகோவெண்ணெயும், கோகோடயின் முதலிய பெயருள்ள வெண்ணெய் அல்லது நெய் சாஸ்திர முறையாக எடுத்து அன்னிய நாட்டார் அபரிமிதமான இலாபங்களை அடைந்து வருகிறார்கள்.

அந்தத் துறுவல்கள், வெண்ணெய், நெய் முதலியன செய்வதை நம் தேசச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்தால் நம்மவர்கள் தகுந்த செல்வந்தர்களாகிவிடுவார்கள்.



சாஸ்திர ஆராய்ச்சியில் தேர்ந்தவர்கள் தென்னைப்பயிர் செய்யும் விதங்கள், அதன் காய் முதலியவற்றின் உபயோகங்கள், இவை விஷயமாக பெரிய புத்தகங்கள் சுதேச பாஷைகளில் இலேசான நடையில் மொழிபெயர்த்து புத்தகங்கள் அச்சிட்டு அவைகளைக் கிராமப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பாக்க வேண்டும். அடிமைத் தொழிற் கல்வியை நிறுத்தி நிருவிக் கைத்தொழில் கல்வி மட்டில் நம் தேசச் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

நம் தேசத்தவர்கள் புடவைகள் முதலியனவற்றிற்கு சாயங்கள் போட்டு வந்த பழைமையான வழக்கங்களையெல்லாம் மறந்துவிட்டு அன்னிய நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாயங்களை வாங்கி உபயோகித்து வருகிறார்கள். அன்னிய நாட்டார் நம் தேசச் சரக்குகளையே வாங்கிப் போய் சாயங்களைச் செய்து நம்மவர்களுக்கே பதின்மடங்கான விலைக்கு விற்கிறார்கள். தேசத்தினின்றும் டிவிடிவிக்காய்கள், மருதாணியிலைகள் இவைகளை ஏராளமாக ஐரோப்பியர்கள் வாங்கிப்போய் கருப்பு, செவப்புச் சாயங்கள் செய்கிறார்கள். சமுத்திரக் கரையோரமாக உமரி என்றதோர் செடிகள் உவர் நிலத்தில் கொழுமையாகப் பயிராகின்றன. இதன் இலை செடி முதலியவற்றை நன்றாக எரித்தால் ஈயக்கட்டி போலாய்விடும். அதை ஐரோப்பியர்கள் வாங்கிப்போய் சாயத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள். பலவர்ணச் சாயங்கள் கரைந்து போகாமல் நீண்டகாலமிருக்க வேண்டியதற்காக அந்த உமரிச்சாயக்கட்டி சேர்ப்பதாகத் தெரிகிறது. இதுபோன்ற பச்சிலைகள் முதலியன நம் தேசத்தில் மிகுதியாயிருப்பதை நம்மவர்கள் உபயோகிக்கத் தெரிந்துகொள்ளாமல் அன்னிய நாட்டார் அதிக லாபங்களையடையக் கொடுத்துவிடுவது மிகவும் விசனிக்கத்தக்கது. அச்சாயங்கள் செய்யும் சாஸ்திரங்கள் ஆங்கில முதலிய அன்னிய பாஷைகளிலுள்ளவற்றைத் தருவித்து சுதேச பாஷைகளில் மொழிபெயர்த்து புத்தகங்களை அச்சிட்டு நம் தேச கிராமச் சிறுவர்களுக்கு அவைகளைக் கட்டாயப் படிப்பாக்கவேண்டும்.

இவ்விந்தியா தேசத்துக் கரும்பு ஏகர் 1-க்கு 10 டன் வீதமும், ஜாவா தீவிலுள்ள கரும்பு ஏகர் 1-க்கு 40 டன் வீதமும் கிடைப்பதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். நம் தேசம் நீர்வளம், நிலவளங்களிற் சிறந்ததாக இருப்பதால், தகுந்த மருமத்துகள் செய்து சாஸ்திரப்படி தகுந்த எருக்கள்போட்டு சாகுபடி செய்தால் ஜாவாத்தீவில் கிடைப்பதுபோல் ஜாஸ்தியான இலாபங்கள் கிடைக்கும். கரும்புப் பயிர் செய்யும் முறைகள், ஜீனி காய்ச்சும் விதங்கள் முதலியன விஷயமாக ஆங்கிலத்திலேற்பட்டிருக்கும் சாஸ்திரங்கள் சுதேச பாஷைகளில் மொழிபெயர்த்து புத்தகங்கள் அச்சிட்டு அவை

களைக் கிராமப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பாக்க வேண்டும். இக் கல்வி கற்பித்தால் லட்சக்கணக்காகவும், கோடிக்கணக்காகவும் நம் தேசத் தவர்கள் தனவந்தர்களாகி விடுவார்கள். ஜாவாவினின்றும் சர்க்கரை இறக்குமதி செய்யப்படுவது நின்றுபோகும். நம் தேசச் சர்க்கரை அன்னிய நாடுகளுக்கு அபரிமிதமாக ஏற்றுமதி செய்யப்பட்டு நம்மவர்கள் அளவிறந்த செல்வங்களை அடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

நம்மிந்தியா மலைவளங்களிற் சிறந்தனவாயிருந்தும் அதை உபயோகப் படுத்தும் முறைகளை நம்மவர்கள் தெரிந்துகொள்ளாமல், அன்னிய நாட்டார் அதனால் தகுந்த இலாபங்களை அடைந்து வரும்படி விட்டு விட்டார்கள். தேயிலை, காப்பிச் செடிப்பயிர்கள் நம்மவர்களில் பலர் செய்வதில்லை. ஏலத் தோட்டப் பயிர் செய்யும்படியான பூமிகள் ஏராளமாகவிருந்தும் அப்பயிர் செய்யப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. நம் தேசத்துக்கு மலேயா முதலிய இடங்களிலிருந்து சவ்வரிசி ஏராளமாக இறக்குமதி செய்யப்படுவது பலருக்கும் தெரிந்த விஷயம். அந்தச் சவ்வரிசி இன்னதென்பது அனேகருக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். அது நம் தேசத்தில் பயிராகும் மரவள்ளிக்கிழங்கின் மாவேயன்றி வேறல்ல. தென்னிந்தியா மலைகளிலும் செம்மண் நிலங்களிலும் அவைகள் செழுமையாகப் பயிராகும். அந்தப் பயிர் செய்து அதன் கிழங்கு மாவினின்றும் சவ்வரிசி எடுக்கும் விபரங்களை அதிக சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். அப்பயிர் செய்யும் விதங்கள், சவ்வரிசி காய்ச்சி எடுக்கும் விதங்களைக் கிராமப் பள்ளிக்கூடங்களில் சொல்லிவைக்க வேண்டும்.

சதுப்பு நிலங்களில் அன்னாசிச் செடிகள் மலேயா தீவுகளினின்றும் மிகக் கொழுமையாகப் பயிராகும். அன்னாசிப் பழங்கள் பாடஞ்செய்யப்பட்டு ஐரோப்பா முதலியவிடங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம்மவர்கள் அப்பயிர்கள் செய்து பழங்களைப் பாடஞ்செய்யவும் அந்த அன்னாசிச் செடியின் நாரினால் நார்மடி என்னும் வஸ்திரங்கள் செய்யப்படுவதால் அந்த நார் எடுக்கும் விபரங்களையும் கிராமச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ரயில்வே சுத்தாழை எந்தப் பொட்டலான மண்ணிலும் பயிராகும். அதன் நாரை ஐரோப்பியர் அமெரிக்கர்கள் தகுந்த விலை கொடுத்து வாங்குகிறார்கள். அந்தப்பயிர் செய்தால் ஏகர் 1-க்கு ரூ. 50-க்குக் குறையாமல் இலாபங்கிடைக்கும். அத்துடன் எருக்குப் பயிருஞ் செய்யலாம். அதன் நார் மிகவும் உறுதியுள்ளது. அந்த நாரும் தகுந்த விலைக்கு விற்கப்படும். இவை முதலிய பயிர்கள் செய்யும் விதங்களை மாணாக்கர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

A. நடேச பிள்ளை,
வக்கீல்.

---



# ஒற்றுமை.

எவ்வித காரியத்தையும் சாதிக்கக்கூடிய ஆற்றலுடையதெதுவோ, பலமற்றவர்களுக்குங்கூட மிகுந்த ஆற்றலை யளிக்க வல்லதெதுவோ, பிற நாட்டினர்க்கு அச்சத்தை விளைவிப்பதெதுவோ, தேசத்தின் அல்லது சமூகத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதெதுவோ, செயற்கரிய செய்கைகளையும் செய்து முடிக்கத்தக்க வலிமை வாய்ந்ததெதுவோ, ருஷியாவில் தாண்டவமாடிய கொடுங்கோலாட்சியைத் தொலைத்து ஜனதிபத்தியத்தை நிலைநாட்டிய மகாசக்தி யெதுவோ, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அளவற்ற செல்வம் பெருகுவதற்கும், குடியாட்சி சாந்தமாக நிலைத்திருப்பதற்கும் அடிப்படையாயிருந்த—இருக்கிற மூல தத்துவமெதுவோ, நம்முடைய சுய மரியாதையைக் காத்துக்கொள்ளுவதற்கு அரணாகவுள்ளதெதுவோ, ஒவ்வொரு சமயத்தின் மூல காரணமான தெய்வங்களின் உண்மை வடிவப் பொலிவு எதுவோ, சர்வ சமயங்களின் முடிவான கொள்கைகளுக்குள் மிளிரும் விளக்கத்தின் பரிணாமப் பொருள் எதுவோ, அத்தகைய "ஒற்றுமை" யென்னும் மகாசக்தி நாட்டின் தற்போதைய நிலைமைக்கு அத்தியந்த அவசியமாக வேண்டப்படுகிறது. இந்த ஒற்றுமை யென்னும் பராசக்தி நம் நாட்டை விட்டு அகன்று பல நூற்றாண்டுகளாயின. எப்போது கன்னோசி நாட்டரசனாகிய ஜயசந்திரன், தன் மகளாகிய ராணி சம்யுக்தையின் விருப்பத்திற்கு மாறாக தன் மாப்பிள்ளையாகிய பிருதுவிராஜன்மீது சீற்றங்கொண்டு அவனைக் கொல்லவேண்டி அயல் நாட்டரசனாகிய மகமத் கோரியைத் தனக்குப் படைத் துணையாகச் சேர்த்துக் கொண்டானோ; அப்போதே ஒற்றுமையென்பது இந்நாட்டைவிட்டுச் சிறுகச் சிறுகக் கழியத் தொடங்கி

விட்டது. மிகுந்த வலிமை வாய்ந்த "ஸெமிராமிஸ்" (Semiramis-queen of the Assiarians) என்னும் அரசியின் படையெடுப்பை எதிர்த்து முறியடித்து அஸ்ஸீரியா தேசத்தினரின் படைக்கலங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்ட மகா வீரனாகிய வீரசேனனால் பரிபாலிக்கப்பட்டுவந்த இந்த தேசம், நந்தன், சந்திரகுப்தன், பிம்பசாரன், அசோகன், சமுத்திரகுப்தன் முதலான சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்தியச் சக்ரவர்த்திகளால் பரிபாலிக்கப்பட்டுவந்த நமது தேசம், வலிமைவாய்ந்த அலெக்ஸாண்டரைத் தோற்கடித்த இந்த நாடு, அந்தோ! தற்போது எவ்வளவு கேவலமான பலஹீனத்தை யடைந்திருக்கிறது!! பிருதிவி ராஜனுக்குப் பிறகு ஓராயிரமாண்டு முகம்மதியரின் ஆட்சியில் அடங்கியிருந்தது. அதன் பிறகு பையப் பைய நுழைந்த ஆங்கில வர்த்தகச் சங்கத்தாரால் அபகரிக்கப்பட்டு பிரிட்டிஷாரின் ஆளுகையின் கீழ் அடங்கி ஒடுங்கிக்கிடக்கிறது. பாரதமாதா தற்போது தன் பிள்ளைகளுக்கு வயிறார உணவளிக்க முடியாமல் பர்மா, சிலோன், மலேயா, பினாங்கு, நெட்டால், பிஜி முதலான இடங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்களை அனுப்பிய வண்ணமாகவே இருக்கிறாள். மற்றும் தன்னிடத்திலேயே 50 ஆயிரம் பிள்ளைகளைப் பிச்சையெடுத்து உண்ணும்படி விட்டுக்கொண்டிருக்கிறாள். இந்தியா மிக்க தரித்திர தசையை யடைந்து விட்டது. கஜினி மாமூது, முகம்மத் கோரி முதலானவர்கள் இப்போதிருந்தால் எந்தப் பொருள்களைக் கொள்ளையடிப்பார்கள்! எந்த ரத்தினங்களை யபகரிப்பார்கள்! அவர்களின் கண்களைக் கவர்ந்த பசும்பொற் குவியல்கள், மற்றும் பல நாட்டு மன்னரின் படையெடுப்புக்குக் காரணமாயிருந்த காஞ்சனம் பெருக்கங்கள், ஆங்கிலேயரின் வருகைக்கு அஸ்திவாரமாயிருந்த அரும் பொருள்கள் எல்லாம் இப்போது, எங்கே போயின? எவ்விடத்தில் மறைந்தன? எதனால் அழிந்தன? நமக்குள் நிலைத்திருந்த ஒற்றுமை குலைந்ததாலல்லவா? நமது வல்லமை யெல்லாம் புல்லியதாய்ப் போனது, ஒற்றுமை உடைந்ததாலல்லவா? நமது செல்வ மெல்லாம் சீரழிந்து போனது ஐக்கியத்தின் அழிவினாலல்லவா? நமக்கு இப்போது



அடிமை வாழ்வு கிட்டியது நம்முடைய ஐக்கியத்தின் அதோ கதியினாலல்லவா? நம் சகோதரர்கள் அயல் நாடுகளுக்கேகி அவதிப்படுவது நமக்குள்ளிருந்த ஒற்றுமை ஒழிந்து போய் விட்டதாலல்லவா? அந்தோ! ஒற்றுமை செற்றதாலேற்பட்ட கஷ்டமும், நஷ்டமும் இவ்வளவவ்வளவென்று வரையறுத்துக் கூறவியலுமா? ஒரு வழியில் அல்லது ஒரு பகுதியில் அல்லது ஒரு முறையில் மாத்திரந்தான் ஒற்றுமை குலைந்திருக்கிறதெனக் கூறமுடியாதபடி எந்தத் துறையில் பார்த்தபோதிலும் சின்னபின்னப்பட்டே கிடக்கின்றது. சமயம், ஜாதி, சமூகம், ராஜீயம், வர்த்தகம், விவசாயம்; கைத்தொழில் முதலாகவுள்ள ஒவ்வொரு துறையிலும் ஒற்றுமை குலைந்தே காணப்படுகிறது. மதத்தில் ஒற்றுமையில்லையென்பதற்குச் சமயச் சண்டைகளும், சாமிச் சண்டைகளுமே திருஷ்டாந்தமாகும். சமூகத்தில் ஒற்றுமையில்லை யென்பதற்கு ஜாதித் துவேஷங்களும், பற்பலவித ஆசாரங்களுமே திருஷ்டாந்தமாகும். மற்றுமுள்ள துறைகளிலுமப்படியே. இவ்வாறு நிலைத்து என்றுதான் நம் நாட்டை விட்டகலும்? ஒற்றுமை வேண்டாமென்போர் உலகத்தில் யாருமே யிருக்கமாட்டார்களெனக் கூறலாம். "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" யென்னும் நீதிமொழி அனைவரு மறிந்ததே. "ஒத்துழையாமை" என்னும் இயக்கம் நம் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டதும் நமது ஒற்றுமையை வலியுறுத்தும் பொருட்டேதான். ஒற்றுமை எந்தப் பக்கத்தில் பலப்பட்டிருந்ததோ அந்தப் பக்கத்தில்தான் ஒத்துழையாமை இயக்கமும் வெற்றியடைந்தது. ஆகலால் ஒற்றுமையை வேண்டாமென மறுப்பவராவது, அதன் வலிமையை யுணராதவராவது யாவர்? ஒருவருமே இல்லை. ஆனால் அது நம்மிடையில் நிற்காதொழியக் காரணமென்ன? என்றால், சிறு சிறு குற்றங்களும், அவற்றைச் சகிக்காத தன்மையும், அற்ப மனஸ்தாபங்களும், பொறுமையின்மையும், சபலமும், பொதுநலச் சிந்தையின்மையும், துவேஷமும், பொறாமையும், மற்றும் இவை போன்ற தீய குணங்களும்தான் முக்கிய காரணமெனக் கூறவேண்டியிருக்கிறது. அறிந்தோ, அறியாமலோ இந்தத் தீய குணங்களுக்கு

நமது புத்திகளை அடிமைப்படுத்தி விட்டோம். களங்கமில்லாததாயும், தேஜோமயமாயும், தெய்வீகமாயும் ஒளிர்கின்ற நமது அருமையான புத்திகளின் முதுகிலேறி அத்தீய குணங்கள் சவாரி செய்கின்றன. அதனால் நமது மதிகளெல்லாம் மழுங்கி, நாட்டின் நலத்தை மறந்து, சுய கௌரவத்தையும் இழந்துகொண்டு அல்லற்பட நேரிட்டுவிட்டது. மேற் கூறப்பட்ட தீய குணங்கள் அழிந்துபோமாயின் நமது புத்திகள் சுத்தமாகப் பொலியும் என்பதில் ஐயமில்லை; பரிசுத்தமான மதி யேற்பட்டுவிடுமாயின் ஒரே நாட்டினர், ஒரே மனித ஜாதியினர் என்ற ஐக்கியத் தன்மை யேற்பட்டுவிடும். ஆகவே, அந்தத் தீய குணங்களை அழிப்பதெப்படி? யாதொரு உத்தேசத்தை முன்னிட்டு ஏதேனுமொரு ஸ்தாபனம் அல்லது நிர்மாணத்தில் தலையிடுகிறோமோ, அந்த உத்தேசம் நிறைவேறி நல்ல பலனைக் கொடுக்குமளவும், தலையிட்ட ஸ்தாபனம் அல்லது நிர்மாணத்தின் காரியத்தில் அழுத்தமான சிந்தனையைக் கொள்ளவேண்டும். அந்தச் சிந்தனை எவ்வித சுழல் காற்றுக்கும், மற்றெவ்வித அபாயங்களுக்கும் அசைவுதலில்லாததாயிருக்கவேண்டும். இவ்வாறு மலையைப்போன்ற ஸ்திரமான எண்ணத்துடன் ஸ்தாபனத்தின் விருத்தியிலேயே நோக்கங்கொண்டிருப்போமானால் மேலே கூறப்பட்ட தீய குணங்கள் சுலபமாக சமீபத்தில் நெருங்கமாட்டா. அவ்வாறு ஒரு சமயம் நெருங்கினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பதனால் அவற்றிற்குப் பலக்குறைவே தவிர முன்போல அவை மேலேறிச் சவாரி செய்ய முடியாது.

> "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்."

என்றபடி காரியத்தில் கண்ணாயிருந்தால் இந்தக் கசப்புக் குணங்களெல்லாம் கணத்தில் மாய்ந்துபோம். அவை மாயவே மதி விளக்கமுறும். அவ்விளக்கத்தினால் செயற்கரிய செயல்களையும் செய்துமுடிக்க வல்ல ஆற்றல் வந்தணையும். அதனாலாம் பயன் அளவிடற்கரியதாகும்.



சிறு சிறு துரும்புகளுங்கூட ஒன்று சேர்த்துப் பெருங்கயிறாகத் திரிக்கப்படுமாயின் அது யானையைக்கூடப் பிணிக்க வல்ல ஆற்றலுடையதாகிவிடும். அற்பப் பிராணியாகிய எறும்புகளுங்கூட கூட்டமாகச் சேர்ந்து கற்பாறையின்மேல் ஊர்ந்துகொண்டேயிருக்குமாயின் கற்பாறையும் குழிபடும். "எறும்பூரக் கற்குழியும்" என்ற பழமொழியை யனைவருமறிந்ததே. இவையன்றி இயற்கையாகவுள்ளவை யெல்லாவொன்றும் ஒற்றுமையையே போதிக்கின்றன. நாம் வசிக்கும் பூமி, வானத்திற் றோன்றும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலான ஜடப்பொருள்களும், ஜலம் முதலான திரவப் பொருள்களும், வீசும் காற்றும், கேட்கும் ஒலியும் அனைத்தும் அணுத்திரள்களே யாமென்பது தார்க்கிகர்களின் முடிபு. அணுக்கள் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதாலேயே அவ்வவ் வழக்கங்கள் தென்படுகின்றன. ஆனால், இவ்வணுக்கள் ஒரே தன்மையனவாயில்லாமல் பலதிறப்பட்ட தன்மையனவாயிருக்கின்றன, அதனால் ஒருவிதமான அணுக்களின் பிணைப்பினால் கற்களும், மற்றொருவிதமான அணுக்களின் சேர்க்கையால் கட்டைகளும், இன்னொருவித அணுக்களின் கூட்டுறவினால் நீரும், வேறொருவித அணுக்களின் அமைப்பினால் ஒலியும் உண்டாகின்றன. "மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி" என்ற நன்னூற் சூத்திரத்தினுட் பொருளை யுய்த்துணர்ந்து கொள்க. இயற்கைப் பொருள்களில் சில ஒரேவிதமாயிராமல் வளர்ச்சியுறுவதும், சிலதேய்வுறுவதும் நாம் காண்கிறோம். அவற்றிற்குக் காரணம் அணுக்களின் சேர்க்கையும், பிரிவுமாகிய மாறுதல்களே யெனத் தருக்கநூல் துணிகின்றது. அணுவென்பது எவ்வளவு அற்பமும், பலஹீனமுடைய தென்பதும் அனைவருமறிந்ததே. அவ்வித அணுக்களே யொன்றுபட்டு பிரம்மாண்டமாகிய உலகமாகவும் மற்றும் பல அரிய பெரிய வஸ்துக்களாகவும் பரிணமித்திருக்கிறதென்றால், ஒன்று சேருவதாலுண்டாகும் பெருமையும், மதிப்பும் எத்தன்மையதென வருணித்துக் கூறுவது! மேலும்

எலும்பு, நரம்பு, தசை, தோல், கொழுப்பு ஆகியவை யெல்லாம் சேர்ந்தே உடலென்னும் பெயர் ஏற்பட்டது. கை, கால், கண், மூக்கு, செவி முதலாகிய உறுப்புகள் பலவும் கூடிய உயிருடைய உடலுக்கே மனிதன் என்ற பெயரும் பெறப்பட்டது. உயிர் நீங்கிய உடலுக்கு மனிதன் என்ற பெயரேது? உடலும், உயிரும் ஒன்று சேர்ந்தாலன்றோ உலக வாழ்வு? பல்லாயிரம் மக்கள் சேர்ந்து வாழுமிடமேயன்றோ தேசம்? இமயம் முதல் குமரி வரையிலுள்ள மக்களுக்கிட்ட பொதுவான பெயரே இந்தியத்தாய் அல்லது பாரதமாதா என்பதாகும். 33 கோடி ஜனங்களின் குரல்களே பாரதமாதாவின் குரலாம். 33 கோடி மக்களின் கைகளே பாரதமாதாவின் கைகளாம். 33 கோடி பிரஜைகளின் கஷ்ட சுகங்களே பாரதமாதாவின் கஷ்ட சுகங்களாம். "இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்றார் தாயுமானவர். அவ்வளவு சுலபமாக அழியக்கூடிய தன்மையினவாயினும், கோடிக்கணக்கான ஜனப்பெருக்கம் ஒன்று போலத் தென்படுவதாலல்லவா பொதுவாக இந்நாட்டு மக்கட்கூட்டத்திற்கு "பாரதமாதா" "இந்தியத்தாய்" என்பனவாகிய அருமையும் பெருமையும் வாய்ந்ததும், அழியாத் தன்மை வாய்ந்ததுமான பெயர்கள் மகிமையுடன் ஏற்பட்டிருக்கின்றன? இதனால் ஒன்றுபட்டிருப்பதின் பெருமை எவ்வளவு தெளிவாய் விளங்குகின்றன பாருங்கள். ஆதலால் எத்தனை விதமாக யோசித்த போதிலும் 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பாரதியாரின் அருங்கீதம் நம் மதியின் முன் நிற்காமற் போவதற்கு வழியில்லை. அந்தப் பெரியார் சொல்லியதன் கருத்தென்ன வென்பதைத் தமிழராயுள்ளவரெவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவராவர். தேசம் அந்நியராட்சியின் கீழ் அகப்பட்டிருக்கின்றது. அதனால் சுதேச ஜனங்களுக்குப் போதிய சௌகரியங்களும், சுகங்களும் ஏற்படுவதில்லை. துணி மணி முதலிய பொருள்களுக்காக ஆண்டுதோறும் ஏராளமான பொருள்கள் அயல் நாடுகளுக்குச் சென்ற வண்ணமாகவே யிருக்கின்றன. இதைப்பற்றி ஏல விவசாயி மலர் 2.



இதழ் 7-ல் ஆசிரியர் விவரமாகத் திரட்டிக் காட்டியிருப்பதைக் கவனியுங்கள். இவ்வாறு பணப்பெருக்கு பல விடங்களுக்கும் வழிந்தோடிக் கொண்டிருப்பதால், இந்நாட்டில் வருமானம் குறைந்து வறுமை மேலிட்டிருக்கலாயிற்று. அயல் நாடுகளில் ஆள் ஒன்றுக்குச் சராசரி தினவரும்படி ரூபாய் 3 or 2 வீதம் கிடைத்துக்கொண்டிருக்க, இந்தியாவிலோ ஆளொன்றுக்கு தினவரும்படி ஒரு அணா ஆறு பைசாவே கிடைக்கின்றது. முற்காலத்தில் இந்தியா செல்வத்தில் நிகரற்று விளங்கியது. இந்நாட்டின் செல்வத்திற் காசைப்பட்டே அயல் நாட்டினர் பலர் பலகாலும் இங்கு படையெடுத்து வந்தனர். இப்போது இந்தியா தரித்திரத்தில் நிகரற்றுக் காண்கின்றது. பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் உண்ண உணவும், உடுக்கத் துணியுமின்றி அல்லற்படுகின்றனர். ஆளப்படுவோர் இவ்வாறு சோற்றுக்குத் திண்டாடிக்கொண்டிருக்கவும், ஆளுவோர் அமரேந்திர சுக போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கவும், காரணமென்ன வென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நமது பணமெல்லாம் ஏராளமாக வெளி நாடுகளுக்குச் செல்லுவதாலல்லவா? அவ்வாறு செல்வது நமது சோம்பேறித்தனமும், ஒற்றுமை யின்மையுமேயல்லவா? நமது வாழ்வு கேவலமானது. நமக்குள் ஒற்றுமையில்லாததாலல்லவா? 100000 பேர் பிரிட்டிஷாருக்கு 33 கோடி பேர்களடங்கிய இந்தியா முழுவதும் அடங்கிக் கிடப்பது நம்மவர்களின் பலஹீனத்தை வெளிப்படுத்துகிறதல்லவா? நமக்குள் ஒற்றுமை நிலவுமாயின் ஆகாத காரியமும் உண்டோ? ஒற்றுமையுண்டாயின் எவ்வித காரியத்தையும் சாதிக்கத்தக்க வலிமை யேற்படும். ஒற்றுமை யுண்டாயின் அறிவும் விசாலமடையும், யுக்தியும், புத்தி சக்தியும் மிகமிக வளர்ச்சியுறும். இதனாலன்றோ, மேலே எடுத்துக்காட்டிய ஒற்றுமைக் கீதம் நமது வரகவியின் வாக்கினின்றும் உதயமாயிற்று?

ஆகவே, நம் நாடு செழிப்படைய வேண்டுமாயின், நம்மவருடைய வாழ்வுகள் நன்மையடைய வேண்டுமாயின், நமது வறுமை யொழியவேண்டுமாயின், நமது ஸ்தாபனங்கள் மேன்மை யடைய

வேண்டுமாயின் நாமனைவரும் ஒன்றுபடவேண்டும். நமக்குள்ளிருக்கும் அற்ப மனஸ்தாபங்களை யப்புறப்படுத்த வேண்டும். பொறாமையைப் புதைக்கவேண்டும். பொது நலத்திற்குப் புத்தியில் இடமளிக்க வேண்டும். காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். கலவரங்களைத் தொலைக்க வேண்டும். சென்ற ஐப்பசி மாதச் சஞ்சிகையில் போடிநாயக்கனூரில் இருக்கும் ஏல விவசாயிகளின் தலைமைச்சங்கம் குலைந்துபோய் விட்டதாகக் கண்டேன். ஏல விவசாயியின் ஆசிரியர் அதன் நிலைமையை அவ்வப்போது கவனித்து எச்சரிக்கை செய்துவந்து எவ்வளவோ பாடுபட்டார். இறுதியில் சங்கம் சாய்ந்துவிட்டதென்ற செய்தியையே அவர் பத்திரிகையில் வெளியிட நேர்ந்துவிட்டது அந்தோ! பரிதாபம்!! ஒரு ஸ்தாபனம் இவ்வாறு நிலை குலையக் காரணமென்ன? அற்ப மனஸ்தாபங்களும், துவேஷங்களுமே யல்லவா? பொது ஸ்தாபனங்களில் கொண்டுபோய் சொந்த விரோதங்களைப் புகுத்தலாமா? ஒருவருக்கொருவர் மனக் கசப்புடையவர்களாயிருந்தால், அவர்கள் தாம் தலையிடுகிற பொதுக் காரியங்களிலும் அந்தக் கசப்பை வெளியிட்டு நிர்மாணத்திற்கே அழிவு தேடுவது நம் நாட்டிலுள்ள ஒரு பெருங்குறைவாகும். வேறு பல ஸ்தாபனங்களிலு மிப்படியே. சிறு சிறு விஷயங்களை யெல்லாம் பிரமாதமாகச் செய்து கொண்டு அருமை பெருமை வாய்ந்த காரியங்களை யெல்லாம் ஆற்றில் கரைத்து விடுகிறார்கள். படித்தவர்களும் சரி, படிக்காதவர்களும் சரி, மனிதனுக்கு மனிதன் ஆகாவிட்டால் அவர்கள் கூடியிருக்கும் ஸ்தாபனத்திற்குப் பிடித்தது சனியன். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் இந்தச் சீர்கேடு இல்லாமலில்லை. சில அறிவாளிகளின் மதிவலியினாலும், உழைப்பினாலும் அவை குலையாது நிலைக்கின்றன. ஏல விவசாயிகளின் சங்கம் நமது நாட்டிற்கே பெரிய கவுரவம் தரத்தக்கதாயிருந்தது. ஓர் விவசாய சங்கம் இவ்வாறு பெரிய நிர்மாணத்துடன் வர்த்தகத்தையும் உள்ளடக்கிக்கொண்டு தென்னிந்தியாவில் மற்றெந்த இடத்திலும் இருந்ததில்லை. அவ்விதப் பெருமை வாய்ந்த சங்கம் தலைசாய்ந்ததென்றால் பொதுவாகத் தென்னாட்டிற்குப், சிறப்பாக ஏல



விவசாயிகளுக்கும் ஒரு பெரிய அவமானமாகும். இனியேனும் அறிவாளிகளான ஏல விவசாயிகள் எல்லோரும் ஒன்றுபட்டு தலைமைச் சங்கத்தைத் தாங்கிப் புத்துயிரளித்துப் போஷிக்க முன்வர வேண்டும் அபிப்பிராய பேதமென்பது எந்த நாட்டிலும், எந்த சமூகத்திலும், எந்த விஷயத்திலும் இல்லாமற் போகாது. இருந்தபோதிலும் அவ் விஷயம் வேறு. அதனால் விரோதமுண்டாவதற்கு இயற்கையாக ஹேதுவில்லை. வேணுமென்று வைத்துக் கொண்டால், அது அபிப்பிராய பேதத்தின் குற்றமாகாது. இராஜீயக் கொள்கையிலுங்கூட நம் நாட்டுத் தலைவர்களுக்குள் பற்பல அபிப்பிராய பேதங்களேற் பட்டிருக்கின்றன. மகாத்மா காந்திக்கும், காலஞ் சென்ற சி. ஆர். தாஸுக்கும் ஒத்துழையா இயக்கத்தில் அபிப்பிராயபேத மேற்படவில்லையா? பண்டித மோதிலால் நேருவுக்கும், காலஞ் சென்ற லாலாஜிக்கும் அபிப்பிராயபேத மேற்பட்டதை யார்தான் அறியார்? திலகருக்கும், கோகலேயிக்கும் அபிப்பிராய பேதமில்லையென்று சொல்லமுடியுமா? இருப்பினும் அவர்கள் தேசிய இயக்கத்திற்கு ஏதாவது பங்கம் விளைவித்தார்களா? நாட்டின் நிலைமையை யுன்னி ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டுதானே வந்தனர்? அவர்கள் பரஸ்பரம் அன்பு பாராட்டுவதில் குறைந்தவர்களா யிருக்கவில்லை. அவர்கள் "விருப்பு வெறுப்பற்றவர்களுக்கு உலகெலாம் ஓர் குடும்பம்" என்ற உபநிஷத் வாக்கியத்திற்கு இலக்காக நிலவும் மேதாவிகள். அதனாலேயே அவர்கள் மகா புருஷர்கள் எனப் புகழப் பெறுகின்றனர். நம் நாட்டின் கௌரவமும் அவர்களுடைய வாழ்க்கையிலேயே அடங்கி மிளிர்கின்றன. அவர்களைப் போன்ற பெருமிதமான குணம் தான் நம் நாட்டில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமாக வேண்டப் படுகிறது. மேல் நாட்டாரைப் பாருங்கள். என்ன மனஸ்தாபமிருந்த போதிலும் அவர்கள் பொது ஸ்தாபனங்களை மாத்திரம் கவிழ்க்க ஒருப்படுவதில்லை. யார் எப்படிப் போயினும் ஸ்தாபனம், சிறப்படைய வேண்டுமென்பதே அவர்களின் கொள்கை. ஆனால், ஸ்தாபனம் எப்படிப் போயினும் நமது துவேஷத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்பதே நம்ம

வரின் கொள்கை! மேலே கூறப்பட்ட நற் குணங்களும், ஐக்கிய புத்தியும் நம்மை விட்டகன்ற வண்ணமாகவே யிருக்கின்றன. அவ்வாறு அகலும்படி நாம்தான் விடுகிறோம். ஒற்றுமை நீங்குவதற்கும், நிலைப்பதற்கும், மக்களாய்ப் பிறந்தவர்களும், ஆறறிவுவுள்ளவர்களுமான நாம் ஒவ்வொருவரும்தான் காரணமாயிருக்கிறோமல்லது தனக்குத்தானே அது நீங்குவதுமில்லை, நிலைப்பதுமில்லை. ஆதலால், அந்த மேலான ஒற்றுமையென்னும் பண்பு நம்மிடையே நிலவி வளர்ந்தோங்குமாறு செய்துகொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமான செய்கைகளில் முதன்மையானதாகும்.

இறைவன் அருள்புரிக.

ஆ. ராமஸ்வாமி.

---

# விநோத மரங்கள்.

எரிமலைமரம்:— இம் மரம் ஜப்பான் தேசத்தில்தான் இருக்கிறதாம். சூரியன் அஸ்தமனமாகும் தருணத்தில் மரத்தின் மேல் பாகத்திலுள்ள கிளைகளிடமிருந்து வெண்மையான புகை கிளம்புகிறதாம். காரணம் என்னவென்று இதுவரையில் யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. இம் மரம் சாதாரணமாக 60 அடி உயரம் வளருகிறதாம். சூரிய அஸ்தமன மாவதற்குமுன் புகை சிறிதும் காணப்படுகிறதில்லையாம்.

மசி மரம்:— இது கொலம்பியாவில் உண்டாகிறது. இதிலிருந்து சிவப்பு நிறமான திராவகம் வடிந்துகொண்டிருக்கிறது. நல்ல சிவப்பு மையாக உபயோகிக்கலாம். இந்த மையினால் எழுதினால் பேனாவின் நுனியில் துருப்பிடிக்காது. பௌவுண்டன் பேனாவுக்கும் இந்த மையை உபயோகிக்கலாம். இந்த மையை ஒரு காகிதத்தில் எழுதி ஒரு மணி நேரம் கழித்துப் பார்த்தால் கறுப்பு நிறமாக மாறிவிடுகின்றது.



ஊசி நூல் மரம்:— இது மெக்சிகோ என்னும் நாட்டில் இருக்கிறது. வழிப்போக்கனுக்கு இதனால் அதிக உபயோகம் உண்டு என்று அவ் வூரார் கருதுகிறார்கள். இம் மரத்தின் இலைகள் கறுப்பும் பச்சையும் கலந்த நிறத்தை உடையனவாம். ஒவ்வொரு இலையின் நுனியிலேயும் ஊசி போன்ற முள் இருக்கிறதாம். அந்த இலையை விரித்துப் பார்த்தால் முள் போன்ற ஊசியும் மிக்க நீளமான நூல் போன்ற வழவழப்பான நாறும் காணப்படுகிறது.

வழிகாட்டி மரம்:— காட்டில் வழிதப்பிப் போவோர்களுக்கு வழி காட்டும் மரமென்று சில ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது மேல் நாட்டுப் பிரதேசங்களிலுள்ள காடுகளில் ஏராளமாய்க் காண முடியுமென்று தெரியவருகிறது. வழிதப்பித் திண்டாடித் திரியும் பேர்களுக்கு இது மிகவும் உபயோகமானது. இம் மரத்தில் பசுமையான புஷ்பங்கள் உண்டாகும். உயரம் 4 அடியிலிருந்து 6 அடி வரையில் வளர்கிறதாம். கொழுந்து இலைகள் வடக்கு முகமாக நீட்டிக்கொண்டிருக்கும். இதைப் பார்த்து வழிதப்பியவர்கள் தாங்கள் எந்த திசையில் இருக்கிறார்களென்று அறிந்துகொண்டு தாம் போகவேண்டிய திசையை நோக்கிச் செல்ல உதவுகிறது.

சீட்டி அடிக்கும் மரம்:— இதற்கு விஸ்லிங் ட்ரீ என்று பெயர். இம் மரம் பிரான்சு தேசத்திலிருக்கிறது. இம் மரத்தின் இலைகளில் துவாரங்கள் இருக்கின்றனவாம். அதன் வழியாகக் காற்று இடைவிடாமல் நுழைந்து அபூர்வமான கானம் உண்டாக்குகிறதாம். இந்தக் கானம் ஆரம்பமாகும்போது கேட்பதற்குப் பயங்கரமாயிருக்கும் என்று தெரிகிறது. இலைகளிலுள்ள துளைகள் புழுக்களால் செய்யப்பட்டனவென்று தெரியவருகிறது. இம் மரத்தைப் புல்லாங்குழல் மரமென்றும் அழைக்கிறார்கள். இம் மரம் அரேபியாவிலும் சிற்சில இடங்களில் காணப்படுகிறதாம். இந்தியாவிலும் கானம் பாடும் மரங்களிருக்கின்றன. ஆனால் அவைகளின் இலைகளில் துவாரம் கிடையாது.

வருத்த மரம்:— இது ஒரு அற்புதமான மரம். இது காலிப் போர்னியா, நிவேதா, ஆர்ஜோனு தேசங்களில் உண்டு. இது 10 முதல் 20 அடி உயரமிருக்கும். காற்றானது இம் மரங்களின்பேரில் படுமாயின் தங்களுடைய வருத்தத்தையும் அதிருப்தியையும் உடனே காட்டிவிடுகின்றனவாம். இலைகளெல்லாம் சல சலவென அசைந்து ஒரு விதமான தொனியை நாற் புறமும் வியாபிக்கச் செய்கிறது. அம் மரத்தினின்று வரும் காற்று துர்வாசனையுடையதாக இருக்கிறது. ஏறக்குறைய தொட்டால் சுருங்கி, நிழல் சுருங்கி என்னும் செடிகளினுடைய இயல்பு இதற்கும் உண்டு என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். தொட்டால் சுருங்கி என்னும் செடியைத் தொட்டால் இலைகளெல்லாம் சுருங்கிக் கொள்ளும். நிழல் சுருங்கி என்னும் செடியின்மீது மனிதனுடைய நிழல் விழுமாகில் இலைகளெல்லாம் சுருங்கிக்கொள்ளும்.

மெக்சிகோவில் டூலா என்ற இடத்தில்தான் உலகத்திலிருக்கும் மரங்களெல்லா வற்றையும்விடப் பெரிய மரமிருக்கிறது. அது உயரத்தில் பெரிதாயில்லாவிடினும் பருமனில் பெரியதாகும். அதனுடைய அடிமரம் 154 அடி சுற்றளவிருக்கிறது. அம் மரத்திற்கு ஆயிரக் கணக்கில் வயதாகியிருக்குமென்றும் தாவர வர்க்க சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

வட இந்தியாவில் இம்மாதிரியான மரங்கள் அநேகம் இருப்பதாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலுமுள்ள பெரிய தோட்டங்களில் இவ்வதிசயமான மரங்களைப் பயிர் செய்து வந்தால் நலமாகும்.

பயங்கர விருட்சம்:— பிரேஸில் நாட்டின் உட்பகுதிகளில் இதுவரை நாகரிக மனிதர்கள் அடிவைக்காத இடங்களுக்கெல்லாம் போய்த் திரும்பியிருக்கும் டாக்டர் மேரி யானோ டிஸில்வா என்பவர் அங்கே தாம்கண்ட ஒரு பயங்கரமான விருட்சத்தைப் பற்றி கூறுகிறார். இம் மரத்தின் அடிப்பகுதி 3 அடி குறுக்களவும் 20 அடி உயரமும் உள்ளதாம். அவ்வடிப்பகுதியைச் சுற்றி



3 அடி அகலமும் 15 அடி நீளமும் ஓர் அங்குலம் பருமனும் உள்ள பெரிய இலைகள் ஏராளமாக முளைத்துத் தழைத்திருக்கின்றனவாம். இவ்வதிசய மரத்தினின்றும் இடைவிடாது மனோகரமான நறுமணம் வீசிக்கொண்டிருக்கிறதாம். ஆனால், அந்தோ! இந் நறு மணத்தினால் கவரப்பட்டு அம் மரத்தை அணுகும் பிராணிகளின் நிலை பயங்கரமானது. அந்தப் பிரதேசத்தில் ஏராளமாக வசிக்கும் குரங்குகள் சில சமயம் அவ் வாசனையினால் ஈர்க்கப்பட்டு வந்து அம் மரத்தில் ஏறுமாம். உடனே மரத்தின் பிரமாண்ட இலைகள் மேலே குவிந்து வந்து குரங்கை அமுக்கிவிடுமாம். மூன்று நாளைக்குப் பின்னர் அவ் விலைகள் மீண்டும் விரியும்போது சிற்சில எலும்புத் துண்டுகள் மட்டுமே கீழே உதிருமாம்.

பால் மரம்:— பேட்ஸ் என்னும் ஆங்கிலப் பிரயாணி, அமெரிக்காவிலுள்ள அமேஜான் நதி தீரத்தில் தாம் கண்ட பால் மரங்களைப் பற்றிக் கூறுவது,

"நாங்கள் முன்னமேயே இக்கானகங்களில் ஓர் நூதன வர்க்கத்தைச் சார்ந்த மரங்கள் உளவென்றும் அவைகள் பசும்பாலை நிகர்க்கும் ஓர்விதப்பால் கொடுக்கின்றனவென்றும் கேள்விப் பட்டோம். நான் பாரா என்னும் நகரில் இருந்தபோது, இம் மரத்தின் பழங்களைச் சாப்பிட்டேன். நீக்ரோவப் பெண்டிர் அவைகளைச் சந்தையில் விற்கின்றனர். இம்மரத்தை வெட்டித் தண்ணீரில் பல்லாண்டுகள் போட்டாலும் அவைகள் சீர்கேடடைவதில்லை எனவும் கேள்விப்பட்டிருந்தேன். நாங்கள் கானகத்தருகே ஒரு பங்களாவை வாடகைக்கு வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது காட்டின் புகுந்து விநோதங்களையெல்லாம் பார்த்து வந்

தோம். அப்போது பால் கொடுக்கும் மரங்களைக் காணும் பாக்கியம் கிடைத்தது. இம்மரங்கள் மிகவும் உயரமானவை. இலைகளுக்குச் சுற்றிலுமிருந்த பெரிய பெரிய மரத்துக்கும் வித்தியாசம் நன்றாகத் தெரிந்தது. இவைகளின் மேற்றோல் செந்நிறம் படைத்திருந்தது. அது மேடு பள்ளமாக இருந்தது".

மேற்பட்டையை உரித்துத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துச் சுதேசிகள் செந்நிறச்சாயம் செய்கின்றனர். இப் பட்டையை வெட்டினால் மரத்தினின்றும் பால் வெளிவரும். பனை, தென்னை முதலியவைகளிலிருந்து கள்ளிறக்குவது போலவே இவைகளிலிருந்து சுதேசிகள் பால் இறக்குகின்றனர். சாயங்காலம் இம்மரங்களருகேசென்று பட்டையைக் கத்தியால் கொத்திவிட்டு அவைகளின் கீழ் மட்பாண்டம் வைத்துவிட்டு வந்துவிடுவர். காலையில் மட்பாண்டம் நிறையப் பாலிருக்கும்.

இவ்வாங்கிலப் பிரயாணி, பன்னாட்களாக வெய்யிலில் காய்ந்துகொண்டிருந்ததோர் பால் மரத்துண்டை வெட்டினாராம். அதிலிருந்து பால் சுரந்ததாம். இதைக் காபியில் சேர்த்துச் சாப்பிட்டாராம். பசுவின் பாலைக் காப்பித் தண்ணீரில் சேர்த்துக் குடித்தால் எவ்வாறிருக்குமோ அவ்வாறே ருசியுடன் திகழ்ந்ததாம். இப்பாலை வெறும் வாயில் குடித்தால் பசும்பாலவ்வளவு இனிப்பாக இருக்கவில்லையாம். ஒருவகைக் கெட்ட சுவையுடையதாக இருக்கிறதாம். சில மணி நேரம் இருந்தால் இப்பால் கட்டியாகிவிடுமாம். ஒட்டுந் தன்மையுடையதாகவும் இருக்கும். சுதேசிகள் மட்பாண்டங்கள், பீங்கான்பாத்திரங்கள் உடைந்தால் ஒட்டுவதற்கு இதை உபயோகிக்கின்றனர்.

அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம். அவ்வாறே இப்பாலை அதிகமாகக் குடித்தால் மரணம் ஏற்படுகிறதாம்.



ராக்ஷஸ மரங்கள்:— இம்மரங்கள் ஆகாயத்தையளாவி நிற்கும் தென்னை மரங்களைப்போல் கிளைகள் விடாமல் உயரமாக வளரும். அவைகளின் பட்டை மிகவும் கனமாக இருக்கின்றனவெனினும் அதைக்காட்டிலும் கிளைகளில்லாமல் வளருவதே நமக்கு வியப்பளிக்கும். ஒரு பர்லாங்கு தூரத்திற்கு ஓர் உயர்ந்த மரம் தான் (இவ்வர்க்கத்தைச் சேர்ந்தது) வளரும். அவைகளருகே சிறிய மரங்கள்தான் வளர முடியும், பெரியவைகட்கு இடம் அகப்படாது.

அடிமரத்தின் மேல்பாகம் (இங்குதான் அவை குழாயைப் போல் உருண்டையாக வளரும்) சுமார் 20-முதல் 25-அடி சுற்றளவு உடையது. இதுதான் குறைந்த சுற்றளவு. வான் மார்ஷியஸ் (Van Martiers) என்னும் ஐரோப்பியர் 50, 60-அடி வரையில் சுற்றளவுள்ள மரங்களைப் பார்த்ததாகக் கூறியுள்ளார். இம்மரத்தின் உச்சியில் முளைக்கும் கிளைகளில் அடியில் இருப்பதற்கும் பூமிக்கும் சுமார் 100-அடி தூரமுண்டு. ஒவ்வோர் மரமும் 180 முதல் 200 அடி உயரம் வரையில் வளரும். மற்ற மரங்களுக்கு நடுவே இது வளருவதைப் பார்த்தால் ஒரு பெரிய கோபுரம் சிறிய வீடுகளுக்கு நடுவே இருப்பதுபோல் தோன்றும்.

## திருவாங்கூரில்

### திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்.

நமது தலைமைச் சங்கம் நிலை குலைந்து நின்றுபோய்விட்டது. ஐயோ! பெயரளவிலாவது இது இருக்கட்டுமென்று எத்தனையோ பேர்கள் நினைத்தார்கள். அதற்குக்கூட இப்பொழுது வழியில்லாது போய்விட்டது. இனி புதிதாக ஒரு சங்கம் உதிப்பதற்கு அறிகுறிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஏல விவசாயிகளாகிய நமக்கு மத்தியான, வசதியான ஒரு இடத்தில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்ற பெயரால் புதிதாக ஒரு சங்கம் ஸ்தாபிக்கும் பொருட்டு ஏல விவசாயிகள் அனைவரும் ஒன்றுகூடி வேண்டிய வேலைகளை இப்பொழுது செய்யவேண்டியது அத்யாவஸ்யமாக நேரிட்டிருக்கிறது. கனம் திவான் V. P. மாதவராவ் அவர்கள் நிபந்தனையின் காலம் ஏல விவசாயிகளுக்கு நெருங்கிக்கொண்டு வருகிறது. இந்நிபந்தனையின் முடிவுகாலத்தில் நிச்சயமாகவே ஏல விவசாயிகளைத் திருவாங்கூர் சர்க்கார் சங்கடப்படுத்தும். அப்பொழுது கிளர்ச்சிகளும் முயற்சிகளும் செய்வதற்கு ஒரு ஸ்தாபனம் அவசியம் வேண்டும். இப்பொழுதிருந்தே இந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்திக்கொண்டு போனால்தான் ஏல விவசாயிகளுக்கு அநேக அநுகூலங்கள் கிடைக்கும். திருவாங்கூர் பிரஜா சபை, சட்ட சபை முதலியவைகளில் இச் சபையின் பிரதி நிதிகளுக்கு அவசியம் ஸ்தானங்கள் கிடைக்கும்.



சென்றதைக் கருதாதீர்கள். பழைய தலைமைச் சங்கத்தை எண்ணி எண்ணி ஏங்குவதில் பயனில்லை. போன காலம் திரும்பி வாராது. புதிய அமைப்பு, புதிய அமைப்பு என்ற வேக உணர்ச்சி உலகமெங்கும் கிளம்பிக்கொண்டிருக்கிறது. ஆகையால் நவீன முறையில் பலமான அஸ்திவாரத்துடன் நவசக்தியுடன் திருவாங்கூரில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்று ஒன்று ஸ்தாபியுங்கள். நமது தலைமைச் சங்கத்தின் பழைய பெயர்தான் இப்புதிய சங்கத்திற்கு ஏற்றது. சரியான தியாக புருஷரைத் தலைவராகவும் காரியத்திலேயே கண்ணுடைய கர்ம வீரரைக் காரியதரிசியாகவும் இச் சங்கத்திற்குத் தெரிந்தெடுத்து வேலை செய்ய வேண்டும். தாமதிப்பதில் நஷ்டமே கஷ்டமே.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் புனர் ஜன்மம் எடுத்துப் பழைய அருமைப் பெயருடன் விளங்கப் போவதைக் காண அநேகர் ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

# ஆசிரியரின் குறிப்புகள்.

## ஏல விவசாயிகளில் ஐக்கியம்

திருவாங்கூரில் ஏல விவசாயம் செய்யும் ஏலக்குடிகள் சில காலம் ஒற்றுமையாயிருந்து வந்ததால் ஏலத்திற்கு நல்ல விலையும் கௌரவமும் உண்டாகிக்கொண்டு வந்தது. ஏல விவசாயிகளின் வேற்றுமையால் தலைச்சங்கம் மறைந்தது. ஏல விவசாயிகளுக்கு அபிவிருத்தி வேண்டுமானால், ஏலக்காயை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் பலமான நிர்மாணத்துடன் வேலை செய்யவேண்டும். புதிய சங்கம் கருக்கொண்டு விட்டது. கர்ப்பத்தைக் கவனித்துக் காப்பாற்றி ஜெனனத்தை எதிர் பாருங்கள்.

## படு கொலைகள்

நமது தாலுகாவில் படு கொலைகள் அதிகரித்து வருகின்றன. காரணம் துவேசமே. சன்மார்க்கப் பிரசாரமும், தலைவர்களின் விசால நோக்கமும், மன்னிக்கும் மனப்பான்மையும் அவசியம் அதிகமாகத் தேவை.

## தாலுகா மறுபடியும் மாற்றம்

தாலுகாக் கச்சேரி பெரியகுளத்திற்கு பிப்ரவரி 1௨ போகிறது. உத்தபாளையத்தில் தாலுகாக் கச்சேரிக்குச் சரியான வசதிகள் கிடைக்கவில்லையென்று கருதியே பெரியகுளத்திற்கு போகிறது.



தாலுகா பழைய கருப்பனை கருப்பனாகப் போகிறது. தாலுகா வாசிகள் தகுந்த கிளர்ச்சி செய்திருந்தால், இப்பேச்சுக்கே இப்பொழுது இடமில்லாதிருந்திருக்கும்.

## ஒரு நல்ல வழி

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியார் கைத் தொழில் அபிவிருத்தி ரசாயன ஆராய்ச்சி முதலியவைகளுக்குத் தொகையை ஒத்திவைத்திருப்பது போற்றற்குரியதே.

## பனகால் அரசர் விண்ணுற்றார்

ஸ்ரீமான் சர் இராமராய நிங்கார் அவர்கள் காளாஸ்திரி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆதியில் காங்கிரஸ்காரராயிருந்தவர். ஒரு சமயத்தில் ஆந்திர மாகாண மகாநாட்டிற்குத் தலைமை வகித்திருந்தார். மாண்டேகு—செம்ஸ்போர்டு திருத்தங்களுக்குப் பின் பிராமணர் அல்லாதவர்களுடைய முன்னேற்றத்திற்காக பெரிதும் உயிர் போமளவும் உழைத்தார். இவர் தென்னிந்தியாவில் பெரிய ராஜ தந்திரி. திராவிடக்கட்சி தளர்வுற்ற தருணத்தில் தனது சாமர்த்தியத்தால் அதற்குப் புத்துயிர் அளித்தவர். இருமுறை மந்திரி வேலை பார்த்தவர். லார்டு வில்லிங்டன் ஆட்சி காலத்தில் சென்னை அரசாங்கத்திற்கு வலது கையாயிருந்தார். கம்பீரமான தோற்றம் உடையவர். இவர் சமீபத்தில் சென்னையில் காலஞ் சென்றது நமக்குப் பெருந்துயரமே. இவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

## ஸ்ரீமான் திருமலைசுப்பு செட்டியாரவர்கள் மரணம்

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் உப அக்ராசனரும், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியின் தலைவரும்,

கோம்பை ஆர்ய வைசிய மரபுத் தலைவருமான ஸ்ரீமான் திருமலை சுப்பு செட்டியாரவர்களை துவேச வெறிகொண்ட ஒருவனால் குத்தப்பட்டு உயிர் நீத்தார். பரிதாபம்! பரிதாபம்!! மரணம் இயற்கை வழி எனினும் இவருக்கா இவ்விதச் சாவு! இவரைக் காட்டிலும் பணக்காரர்களும், படித்தவர்களும் கோம்பையில் சிலர் இருப்பினும்; எல்லா விதங்களிலும் சிறந்து கோம்பைப் பொது ஜனங்களுடைய அன்பை அடைந்தவர் இவர் ஒருவரே. பூத தயையும், வாத்ஸல்யமும், ஆசாரமும், அனுஷ்டானமும், தெய்வபக்தியும் வாய்ந்தவர் இவர். "ஏல விவசாயி"ப் பத்திரிகை தோன்றுவதில் ஆதாவு அளித்தவர்களில் இவரும் ஒருவர். இவரது பிரிவால் கோம்பை ஒரு மணியை இழந்துவிட்டது; இத்தாலுகா ஒரு நல்ல அறிவாளியை, நிர்வாகியை, ராஜ தந்திரியை இழந்துவிட்டது; ஆர்ய வைசிய உலகம் ஒரு பெரியாரை இழந்துவிட்டது. ஈஸ்வரன் இவ்வான்மாவுக்குச் சாந்தி அளிப்பாராக.

ஸ்ரீமான் முத்துக்குமாரஸ்வாமி முதலியாரவர்கள்

இவர் கோம்பையில் ஒரு தனவந்தர்; மதுரை பாரிஸ்டர் ஸ்ரீமான் P. T. ராஜன் அவர்களுக்கு நெருங்கிய பந்து. இவர் இவரது இல்லத்தில் ஒருவனால் சுட்டுக் கொல்லப் பட்டார். இவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

15968

**T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, கோம்பை.**

1913–ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

**பங்கு 1-க்கு ரூ. 3 வீதம் 9,00,000 பங்குகளின் பேரில் ரூ. 27,00,000 மூலதனம்.**

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக்கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கு அனுப்பிவைத்தும், பம்பை, கல்கத்தா, கராச்சி முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகபாத், கான்பூர், ஆக்ரா, ஆசுரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும், மிக்க புகழையும் அடையும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

ஓ. ம. சே. முகிமித்தீன் பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
*T. C. P. A.* ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.

# "பாரதி"

குறைந்த சந்தா! நிறைந்த விஷயங்கள்!! உயர்ந்த பத்திரிகை

மதபேதமற்று ஜாதிபேதமற்றுக் கட்சிபேதமற்று, இந்தியர் அனைவரு(ம்) ஒரு தாயாகிய பாரத மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுட(ன்) தேசாபிவிருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக் கருதி உழைக்கும் தேச மணம் கமழும் மாதப் பத்திரிகை.

**சுதந்திரம் பொங்கும் பத்திரிகை! சமத்துவம் ததும்பும் பத்திரிகை**
**சகோதரத்வம் ஜ்வலிக்கும் பத்திரிகை!!!**

**இதன் ஆசிரியர்: தேவாரம் ரா. நாராயணஸ்வாமி அவர்கள்**
பத்திராதிபர்:—"ஏல விவசாயி."

இலகுவான இனிய நடையில் படிக்கப்படிக்க இன்பமாய், நினைக்க நினைக்க ஆவேசம் உண்டாக்குவதாய் எழுதப்பெற்று "பாரதி" வெளிவரும். அரசியல் துறையிலும், சுதந்திர வளர்ச்சியிலும், மொழிப்பற்றிலும் முக்கியமாகத் தமிழகத்திற்கும் பொதுவாகத் தாயகத்திற்கும் இன்னும் பல வழிகளிலும் ஈடுபட்டு "பாரதி" சேவை புரியும்.

இப்பொழுது தேசத்தில் நிலவி வரும் அருத்தமும், பொருத்தமுமற்ற அனுவசிய வழக்கங்களை அஞ்சா நெஞ்சத்துடன் கண்டித்து அவைகளை நிர்மூலம் செய்யப் பிரச்சாரம் செய்வதில் "பாரதி" சற்றும் தயங்காது முன்னிற்கும்.

"தேசத்தொண்டே தெய்வத்தொண்டு", "மானிட சேவையே மகா சேவை" என்ற உணர்ச்சியை "பாரதி" உண்டாக்கிக்கொண்டேயிருக்கும்.

அறிவை விசாலப்படுத்தும் அறிஞர்களின் உயரிய வியாசங்களையும இன்னும் பல அரிய பெரிய விஷயங்களையும் தாங்கி நின்று "பாரதி" தமிழகத்தைச் சந்தோஷிப்பிக்கச் செய்யும்.

உலகத்தில் நிகழும் பெரும் விஷயங்கள், ஆராய்ச்சிகள், அற்புதங்கள், பத்திராதிபரின் குறிப்புகள் முதலியன "பாரதி"யை அலங்கரிக்கும்.

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—0—0**
வெளி நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—8—0**
அல்லது **4** ஷில்லிங்.

விலாசம்:—
மானேஜர், "பாரதி",
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

**Edited and Published by R. NARAYANASWAMY on behalf of The Travancore Cardamom Planters' Association.**
**Printed at ANANDA PRESS, Uthamapalayam.**



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |